Registered as a News paper in Ceylon ★ விலை சதம் 20

# ஈழநாடு

வார மலர்

"செல்வம் என்பது சிந்தையின் நிறைவே." —குமரகுருபரர்.

காலம் பெறுமதியானது. காலத்தை வீணுக்காதீர்கள். மில்க்வைற் சலவைப் பவுடர் வாங்கிப் பாவித்து நேரத்தையும், பணத்தையும் மிச்சப்படுத்துங்கள். பாவித்த உறைகளை அனுப்பி மிக உயரிய பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் சோப தொழிற்சாலை யாழ்ப்பாணம்.

மலர் 13 | சித்திரை 4 | லபர் 20 | (17-4-71) | சனிக்கிழமை | இதழ் 64

# மண்ணெண்ணெய்க் கப்பல் இன்று பகல் வருகிறது

## ரயில் மூலமாகவும் உணவுப் பொருள்கள் கொண்டுவர ஏற்பாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

**யாழ்ப்பாணப் பாவனையாளர்களுக்கான மண்ணெண்ணெய் ஏற்றிக் கொண்டு விசேட கப்பலொன்று இன்று பகல் 12 மணிக்குப் பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா நேற்றிரவு நமது நிருபரிடம் தெரிவித்தார்**

தற்போது யாழ். மாவட்டத்தில் நிலவும் மண்ணெண்ணெய்த் தட்டுப்பாட்டை ஓரளவு சமாளிக்க இக்கப்பல் கொண்டுவரும் மண்ணெண்ணெய் உதவும் என்று கூறிய அரசாங்க அதிபர் 'ரேஷன்' முறையில் விநியோகிக்கப்படும் மண்ணெண்ணெய்யைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதோடு இந்த இடைக்கால தட்டுப்பாட்டினால் ஏற்படக் கூடிய கஷ்டத்தைத் தாங்கிப் பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டுமெனவும் 'ஈழநாடு' மூலம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

ரயில் மார்க்கமாகவும் மண்ணெண்ணெய், டீசல் எண்ணெய் ஆகிய அத்தியாவசியப் பொருட்கள் யாழ்ப்பாணம் வந்துசேருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ் மாவட்டத்தில் மண்ணெண்ணெயும், சீனியும் மட்டுமே தற்போது தட்டுப்பாட்டிலிருப்பதாகவும் பொதுமக்கள் இதனால் ஏற்படும் சிரமங்களைப் பொருட்படுத்தாது நிலைமை சீரடையும்வரை ஒத்துழைக்கவேண்டுமென்றும் கூடியவரை உணவுப்பொருட்கள் மண்ணெண்ணெய்போன்ற பாவனைப் பொருட்கள் தட்டுப்பாடில்லாமல் விநியோகத்திற்கான எல்லா ஏற்பாடுகளும் துரிதமாக மேற்கொள்ளப் பட்டிருப்பதாகவும் கூறினார்.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு மேலும் பல உணவுப் பொருட்கள் நேற்று வந்து சேர்ந்தன.

## பாப்பரசர் கொலை முயற்சி
## புதன் அன்று தீர்ப்பு

மணிலா, ஏப். 16

பரிசுத்த ஆறுலது பாப்பரசரைக் கொலைசெய்ய முயற்சிசெய்த ஓவியர் பெஞ்சமின் மெடோசன்சாவுக்கெதிரான வழக்கின் தீர்ப்பு புதன்கிழமை அளிக்கப்படவிருக்கிறது.

சரித்திரத்தில் முதல் தடவையாக பாப்பரசர் ஒருவரைக் கொலைசெய்ய செய்த முயற்சிதோல்வியில்முடிந்தது கடந்த நவம்பர்மாதம் 17-ம் திகதி மனிலா விமான நிலயத்தில் பாப்பரசர் வந்திறங்கியபொழுது. மெடோன்சா கத்தியால் குத்திக் கொலைசெய்ய முயற்சிக்கையில் கைதுசெய்யப்பட்டார்.

கடந்த மூன்றுமாத காலமாக மனிலா நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டு வந்தது. இவ்வழக்கின் தீர்ப்பு அடுத்த புதன்கிழமை அளிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது

இக்குற்றவாளியை பரிசுத்த பாப்பரசர் அந்நிகழ்ச்சி நடந்தபொழுதே மன்னித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## ஊரடங்கு உத்தரவை மீறினால் கடும் நடவடிக்கை
### வடபகுதி பொலிசார் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணப் பகுதியில் ஊரடங்கு உத்தரவை அனுசரித்து நடக்குமாறு பொதுமக்களை வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பகுதியில் அமைதி நிலவிய போதிலும் நாடுபூராவும் ஊரடங்கு உத்தரவு அமுலில் இருப்பதால், அதைமீறாது பொதுமக்கள் நடந்துகொள்ளவேண்டும் ஊரடங்கு உத்தரவை மீறுவோர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய பொலிசாருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. பொலிசார் அவ்வதிகாரத்தைப் பயன்படுத்த வழிசெய்யாது பொதுமக்கள் ஊரடங்கு உத்தரவுக்கு அமைய நடக்குமாறு அவர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் பொய் வதந்திகளைப் பரப்பி மக்களை அச்சப்படுத்தும் நபர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்; அவசரகால சட்டத்தின்கீழ் இவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்களெனப் பொலிசார் எச்சரிக்கைசெய்துள்ளனர்.

பட்டினத்திலோ கிராமங்களிலோ புதியவர்கள் வந்திருந்தால் அவர்கள் சந்தேகத்துக்குரியவர்களாகக் காணப்படும் பட்சத்தில் பொலிசாருக்குத் தகவல் கொடுக்குமாறு பொதுமக்களைப் பொலிசார் கேட்டுள்ளனர் அயல் வீடுகளில் புதியவர்கள் வந்திருந்தால் அவர்கள் சந்தேகத்துக்குரியவர்களானால் அவர்கள்பற்றிய தகவல்களையும்பொலிசாருக்கு அளித்து நாட்டில்அமைதிஏற்பட ஒத்துழைக்குமாறு பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

## பிரதமரின் பிறந்தநாள்



கோட்டை, புதன்

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவின் பிறந்தநாள் இன்று. 1916-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ம் திகதி பிறந்த பிரதமருக்கு இன்று 55-வது வயது ஆரம்பமாகிறது

## யாழ். அரசாங்க அதிபர் அறிவிப்பு

அரசாங்க திணைக்களங்கள். காரியாலயங்களில் கடமையாற்றும் சகல அரசாங்க ஊழியர்களும் பாதுகாப்புடன் இருப்பதாக யாழ். அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

### படைவீரர்களின் கடிதங்கள்

இராணுவ, கடற்படை. விமானப்படையில்கருமமாற்றும்படைவீரர்களுக்குஅனுப்பப்படும் கடிதங்களைக் கொழும்பிலுள்ள அவ்வவற்றின் தலைமைக்காரியாலயங்களுக்கு விலாசமிடப்பட்டு அனுப்பப்படவேண்டுமென்றும், கடிதம் சேரவேண்டிய வீரர்களின் பதவிகள், இலக்கங்கள் விலாசத்தில் தெளிவாகக்குறிக்கப்படவேண்டும் என்றும், அவற்றை வீரர்கள் கடமையாற்றும் இடங்களுக்கு தலைமைக்காரியாலயத்திலிருந்து உடனடியாக சேர்க்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

# வடகொரியா ஸ்தானிகராலய அதிகாரிகள் வெளியேற்றம்

## நாட்டின் நலன் கருதி அரசு எடுத்த நடவடிக்கை

கோட்டை வெள்ளி

இலங்கையிலுள்ள கொரிய ஜனநாயக மக்கள் குடியரசு ஸ்தானிகராலயத்தின் சகல அதிகாரிகளும் அவர்களது குடும்பத்தினரும் இன்று இரவு இலங்கையைவிட்டு விமானமூலம் புறப்பட்டுச் சென்றனர்.

நாட்டின்பாதுகாப்புக்காரியங்களை [illegible] கொரிய ஜனநாயகக்குடியரசு ஸ்தானிகராலயத்தின் [illegible] சகல அதிகாரிகளும் அவர்களது குடும்பத்தினரும் இன்று இரவு 7-30 மணிக்கு முன் பாக இலங்கையை விட்டுச் [illegible] திகதி காலை 10 மணிக்கு [illegible] வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தூதரக அதிகாரிகளைக்கேட்டுக்கொண்டார்.

இப்படிக் கேட்கப்படுவதினால் கொரிய ஜனநாயக மக்கள் குடியரசுடனான இராஜதந்திர உறவுகள் பாதிக்கப்படுமென்றோ இரு நாடுகளுக்குமான பரஸ்பரமுள்ள நல்லெண்ணம் சீர்கெட்டுவிடுமென்றோ அர்த்தமல்ல என தூதரக அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது அரசுகேட்டுக்கொண்டதற்கேற்ப அவர்கள் தாயகம் புறப்பட்டுச்சென்றனர். தூதராலயம் இப்பொழுது மூடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# .... மறப்பரோ.... தம்மொழியின் மேல் காதல்

அரசியலுக்காக, தேசத்துக்காக, ஆத்மீக விடுதலைக்காக, சமயக் கொள்கைகளுக்காக சுகபோகங்களைத் துறந்து வாழ்க்கையையே அத்தொண்டுக்கு அர்ப்பணித்த மகான்கள், மகாபுருஷர்கள்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். இவர்கள் போல் மொழிக்காக, தாய்மொழிக்காக வாழ்வு துறந்தோர் அன்றும் வாழ்ந்தார்கள்; இன்றும் வாழ்கின்றார்கள்.

## வெள்ளி மல்லிகை

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் படைத்த இளங்கோ போன்று அரசபீடம் ஆட்சிபரிபாலனம் முதலாம் உன்னத நிலைகளையே துச்சமாக மதித்து தமிழ் இன்பத்தில் மூழ்கித் திளைத்த சாதுக்கள் இவர்கள். விபுலானந்த அடிகள், சுவாமி ஞானப்பிரகாசர், சுத்தானந்த பாரதியார், குன்றக்குடி அடிகள், தனிநாயக அடிகள் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை இவர்கள்போல் இன்னும் பலர். இப்பேரறிஞர்களுடனே சற்றுவேளை உரையாடினாலே தமிழ் அருவியில் மூழ்கித் திளைத்த 'சுகம்' உண்டு.

தமிழ்மொழிபேரில் அடங்காக் காதல்கொண்டு தமிழ் நாட்டு இளைஞர்களின் உள்ளங்களில் தமிழ்பற்றையும் சமயப்பற்றையும் ஊட்டிவரும் குன்றக்குடி அடிகளார் தமிழ்மொழியின் மேன்மையையும் அதன் தொன்மையையும் தமிழ் உலகெங்கணும் பரப்பிவருகின்றார்கள். பாரி நிலையத்தார் வெளியிட்டுள்ள சமய மறுமலர்ச்சி என்ற நூலில் வெளியாகியுள்ள இக்கட்டுரை அனைவருக்கும் உபயோகப்படக்கூடியது.

தமிழ் என்று சொல்லுந்தோறும் நினையுந்தோறும் இன்பப் புதுமது பெருக்கெடுத்து ஓடுகின்றது. ஆம் தமிழே இனிமை; இனிமையே தமிழ்; தமிழே அழகு; அழகே தமிழ்; 'தமிழ் என்பது இனிமை' என்றது பேரிசைச் சூத்திரம். சொல்லினும் கேட்கினும், சிந்தை நிறைக்கத் தோன்றும். இன்ப நல்லியல் நோக்கித் தமிழ் என்று அறைந்தனர் சொல்லறிஞர். அமிழ்தென்பதே தமிழ யிற்று என்பது சொல்லாராய்ச்சியாளர் முடிபு. 'என்றுமுள இனிய தென் தமிழ்' என்று களிகூரப் பாடுகின்றார் கம்பர். தேன் தமிழ் என்பது தென் தமிழாயிருக்க வேண்டும் என்பதைத் தமிழ் இன்பம் நுகர்ந்தவர்கள் சொல்வார்கள். 'தேனுறத் தமிழும்' என்றது கல்லாடம். 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்குங் காணோம்' என்று பாரதியார் பாராட்டுகின்றார். 'தேமதுரத் தமிழோசை' என்றும் கூறுகிறார். 'பாலோடு தேன் பழம் இவைகள் உண்ண இனித்திடுமால், ஏல நினைத்தாலும் இனிப்பாய் தமிழ்த் தாயே' என்றார் மற்றொரு புலவர். அழகுடை நங்கையைத் 'தமிழ் தழீஇய சாயலவர்' என்று பேசுகின்றது சிந்தாமணி.

### தமிழின் தொன்மை

தமிழின் தொன்மையைப் பற்றி என்ன சொல்லுவோம். உலகின் ஆதிமொழிகள் ஐந்தினுள் ஒன்றாக நமது அருமைத் தமிழ் விளங்குகின்றது. இன்று இவ்வுலகில் வழங்கும் மொழிகள் 7,500 வரையுள. இம்மொழிகளெல்லாம் அடிமரத்திலிருந்து கவர் விட்டுக் கிளைத்த கொம்பர்களை ஒத்தன. மொழிகள் எல்லாவற்றையும் ஆராயுமிடத்து அவைகள் எல்லாம் சில இனங்களில் அடங்குகின்றன. அவ்வினங்களும் பின்பு ஒரு தனி மொழியினின்றும் பிரிந்தனவாகக் காணப்படுகின்றன. அத்தனிமொழி எதுவென நீண்டகாலம் ஆராயப்பட்டது. இன்று மேல் நாட்டு அறிஞர்கள் செய்துள்ள ஆராய்ச்சிகளை ஒருங்கு வைத்து நோக்குவோமாயின் தமிழ் மொழியே அம்மொழி என்று பெறப்படும்.

இங்ஙனம் கூறுவது பேராசையால் அல்ல: பழந்தமிழ் மக்களது நகரங்களாகக் கருதப்படும் மொகஞ்சதாரோ, ஹரப்பா முதலிய நகரங்களில் தமிழ் வழங்கிற்று. மதுரை, திருநெல்வேலிப் பக்கங்களில் வரலாற்றுக்காலத்திற்கு முற்பட்ட சவச்சமாதிகள் தோண்டிக் கண்டுபிடிக்கப்பட்டன. அவைகளிற் சிந்து வெளியில் வெளியான புதைபொருள்களில் காணப்பட்டவை போன்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. ஐதராபாத்தில் தோண்டிக் கண்டுபிடிக்கப்பட்ட சமாதிகளில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்களிலும் அவ்வகை எழுத்துக்கள் காணப்பட்டன. இலங்கையிலே கேகாலை என்னுமிடத்தில் உள்ள மலை ஒன்றிலும் அவ்வகை எழுத்துப் பொறிக்கப்பட்டிருக்கின்றது.

இவைகளையெல்லாம் ஒருங்கு வைத்து ஆராயுமிடத்து இமயமலை முதல் இலங்கைவரை ஒரு மொழியே ஒரு காலத்தில் வழங்கிற்று என்பதும் அம்மொழி தமிழ்மொழியே என்பதும் தெரியவருகிறது. மேலும் மக்கள் இனத்தின் தோற்றமே தமிழகத்தில்தான் என்று வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர். இற்றைக்கு இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைய நாகரிகமாகக் கருதப்படும் 'லெமூரியா கண்டம்' தமிழ் நாகரிகத்திற் சிறந்து இருந்தது என்பது வரலாறு. நமது நினைவெல்லைக்கும் வரலாற்று அறிவிற்கும் எட்டிய வரை தமிழ் வரலாற்றின் நமக்குத் தோன்றும் காலம் கி. மு. 30,000 ஆகும். இக்காலத்தில் தமிழ் மொழி பண்பட்ட முறையில் சங்கங்களின் மூலம் வளர்க்கப்பட்டது.

### தமிழ்ச் சங்கங்கள்

இறையனார் களவியலை நக்கீரர் வகுத்த உரையுடன் நாம் படிக்கும்பொழுது நாம் தலை இடை கடைச் சங்கங்களைப் பற்றித்தான் அறிகிறோம். ஆனால் சங்க இலக்கியங்களையும் சங்க காலத்துக்குப் பிற்பட்ட இலக்கியங்களையும் படிக்கும்பொழுது சங்கங்களுக்கு முந்தியும் பிந்தியும் தமிழ் நாட்டில் தமிழ்ச் சங்கங்கள் நடைபெற்றதற்குச் சான்றுகள் பல இருக்கின்றன. தமிழ்ச் சங்கங்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக தமிழ்நாட்டில் நடைபெற்று வந்துள்ளன. நமது வரலாற்று அறிவுக்கு எட்டிய முதல் தமிழ்ச் சங்கம் கி.மு. 30,000 முதல் 16,500 வரை நடந்ததாகும். இது பஃறுளி ஆற்றுத் தென்மதுரைத் தமிழ்ச் சங்கமாகும். இச்சங்கம் நடைபெற்றதற்குச் சான்று பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடிய புறப்பாட்டாகும்.

'செந்நீர்ப் பசும்பொன்
வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி
மணலினும் பலவே'

என்பன புறப்பாட்டு அடிகளாகும். வயிரியர் என்றது முத்தமிழ் வல்லாரைக் குறிக்கும் ஒரு பழஞ்சொல்லாகும். பின்னர் கி.மு. 16,000 முதல் 14,550 வரை, 1,450 ஆண்டுகள் நமது மகேந்திர மலைத் தமிழ்ச் சங்கம். இது போலவே தமிழ்ச்சங்கங்கள் பல இருந்து தமிழை வளர்த்துள்ளன.

அ. செ. மு.




**வரதரின் பல குறிப்பு (DIRECTORY)**

வரதர் வெளியீடு.

விலை ரூபா; 10-00, கிடைக்குமிடம்: வரதர் வெளியீடு, 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

ஆங்கிலமொழியிலும் ஏனைய மேலைநாட்டு மொழிகளிலும் 'டைரக்ரறி' எனப்படும் வழிகாட்டி நூல்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. ஆனால் தமிழ்மொழியைப் பொறுத்தமட்டில் அத்தகைய நூல்களைக் காண்பது அரிதாகும். சென்னை, இந்தியா தமிழ் 'டைரக்ரறி' என்னும் நூலைத் தமிழகம் வெளியிட்டுள்ளது. ஈழத்தில் இப்படியொரு தமிழ்நூல் இல்லையே என்ற குறையை யாழ்ப்பாணம் வரதர் வெளியீட்டினர் போக்கியுள்ளனர். அவர்களது முயற்சி பாராட்டற்குரியது.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் தமது தாய் நாட்டைப்பற்றியும் அதன் ஒவ்வோர் துறையைப்பற்றியும் தமிழ்மொழியில் அறியவியலாதவர்களாயிருந்ததை உணர்ந்த பிரபல எழுத்தாளர் வரதர் 1964-ல் முதலாவது டைரக்ரறியை 'வரதரின் பல குறிப்பு' என்னும் மகுடத்துடன் வெளியிட்டார். அந்நூல் கல்விமான்களிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் மகத்தான வரவேற்பைப் பெற்றது.

இந்த வருடம் 'வரதரின் பல குறிப்பு' என்னும் நாலாவது வழிகாட்டி நூல் முற்றிலும் புதுமை பொலிய வெளிவந்துள்ளது.

இலங்கையைப் பற்றிப் பூரணமாக அறிய விரும்புவோர்க்கு இந்நூல் ஓர் அமுதசுரபி. இலங்கையின் புவியியல், வரலாறு, அரசியல், கல்வி, பொருளாதாரம், கலாச்சாரம், போக்குவரத்து ஆதியன பற்றிய இன்றியமையாக் குறிப்புக்களாலும் பல்வேறு துறைகள் பற்றிய விபரங்கள், முகவரிகள் ஆகியனவற்றாலும் இந்நூல் சிறப்புறுகின்றது.

தமிழ்க்கலைஞர்கள், எழுத்தாளர்கள், அவர்களது முயற்சிகள் பற்றிய விபரங்களையும், ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டிய பல்வேறுபட்ட குறிப்புகளையும் தரும் இந்நூல் ஒரு பொது அறிவுப் பெட்டகமாகும். பகிரங்கப் பரீட்சைகளுக்கு ஆயத்தம் செய்யும் மாணவர்களும், கல்விமான்களும், வர்த்தகர்களும் வைத்திருக்கவேண்டிய அரிய கருவூலம் இவ்வழிகாட்டி.

பெரிய அளவில் அழகிய முறையில் அச்சிடப்பட்டுள்ள இந்நூலை வெளியிட்ட வரதரின் துணிச்சலையும் தமிழ்ப்பற்றையும் யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

—காரை. செ. சு.

ரூபா 1000/- தொடக்கம்
ரூபா 5000/- வரை சேமிப்புக்கு
வருடம் 7 சத வீத வட்டி
கொடுக்கப்படும்
இச் சேமிப்பை 7 நாள் அறிவித்தலில்
எப்பொழுதும் எடுக்கலாம்.
தம்பி அன் கோ.,
284, காங்கேசன்துறைவீதி :: வண்ணார்பண்ணை.

# இன்னிசையாற் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்

— செல்வி. பண்டிதை. தங்கம்மா அப்பாக்குட்டி —

திருமுறைகள் ஆற்றல் வாய்ந்தவை, தூய ஞான உள்ளங்களிலேயிருந்து வெளிப்பட்டவை, வேதாகம சாரமாக அமைந்தவை. எமது நல்வாழ்வுக்கு வழிகாட்டுபவை. வேதத்தைப் பசுவாகவும் அதன்பாலை மெய்யாகமமாகவும் நால்வர் ஓதுந் தமிழை உள்ளுறு நெய்யாகவும் உருவகித்துப்பாடினர் பெரியோர். வேதம் பொது நூல்; ஆகமம் சிறப்பு நூல்; இதனாலேயே மெய்யாகமம் என்று அடைமொழி புணர்த்திக் கூறப்பட்டது. சேக்கிழார் சுவாமிகளும் இதனை 'மிகு சைவத்துறை விளங்க' என குறிப்பிடுகிறார். பாலின் சாரமாக அமைந்த நெய் போல வேதாசாரமாக அமைந்தவை திருமுறைகளாகும். அவற்றைத் 'திருநெறிய தமிழ்' என்று குறிப்பிடப்பட்டிருப்பது மிகப் பொருத்தமாகும். ஏனெனில் வாழ்வை செம்மையான நெறியிற் செலுத்தி ஞானமாகிய உணர்வை நல்குவன [illegible] வர் உணர்வைத் தூய்மை செய்வனவும் இத்திருமுறைகளேயென்ப.

திருமுறைகள் பன்னிரண்டு. அவற்றின் ஆசிரியர்கள் மொத்தம் இருபத்தேழு பேர். இவர்களில் முதல்வராகவும் முதற்பெருங் குரவராகவும் எண்ணப்படுபவர் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார். அவருடைய முதற்பதிகம் 'தோடு' என்ற சொல்லோடு தொடங்குகிறது. பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரிய புராணத்தின் இறுதிப்பாடல் 'உலகெலாம்' என்று பூரணமடைகிறது. எனவே திருமுறைகளின் தொடக்கமும் முடிவும் 'ஓம்' என்ற பிரணவத்தை உணர்த்தி நிற்பது புலனாகிறது. வேறு வேறு காலங்களில்வாழ்ந்தாலும் திருமுறையாசிரியர்களின் உள்ளங்கள் தெய்வீக இணைப்புப் பெற்றவையென்பதை நாம் உணரமுடிகிறது.

## 'திருநெறிய தமிழ்'

'திருநெறிய தமிழ்' என்ற [illegible]பிலே திருஞானசம்பந்தப் பெருமானுடைய பாடல்களை முதலிற் கவனிப்பது பொருத்தமாகும். அவர்கள் முதற்பதிக இறுதிப்பாடலில்,

'அருநெறிய மறை வல்ல
முனியகன் பொய்கை
அலர் மேய
பெருநெறிய புரமாபுர
மேவிய பெம்மானிவன்
றன்னை
ஒருநெறிய மனம் வைத்
துணர் ஞானசம்பந்தன்
உரைசெய்த
திருநெறிய தமிழ்
வல்லவர் தொல்வினை
தீர்தல் எளிதாமே'

எனக் குறிப்பிடுகிறார்.

பெருமான், சைவமும் தமிழும் தழைக்கப்பாடியவர்; தனது பெயரோடு 'தமிழ்' என்ற அடையைப் புணர்த்தி தமிழ் ஞானசம்பந்தன் என்று குறிப்பிட்டவர். வேதநெறி தழைத்தோங்கவும் மிகு சைவத்துறை விளங்கவும், பூத பரம்பரை பொலியவும் அவதாரஞ் செய்தவரோடமையாது, அவைசில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தில் பெண்களை மட்டும் சாகடிக்கும் சில கொடுமைகளுள் ஒரு கொடுமையே லட்சுமியின் வாழ்வையும் சாகடித்தது. அதன் விளைவு . . . ? அதுவரையில் சந்தோஷ லட்சுமியாக இருந்த அவள் கண்ணீர் சிந்த ஆரம்பித்தாள். அன்று ஆரம்பித்த அந்த சோகலட்சுமியின் அழுகை இன்று வரை ஓயவேயில்லை....!

சிறுகதை

# லட்சுமி அழுகிறாள்!

## — கனகாம்பிகை —

பாலில் சிறிதளவு கோப்பி சேரும்போது பால் நரை நிறமாகி விடுகிறது. கோப்பி கூடக்கூட பாலும் படிப்படியாக மாற்றமடைந்து கருமையாகிவிடுகிறது. இதே போலத்தான் மனோகரிடம் இயல்பாக அமைந்திருந்த மனிதப் பண்பு அவன் தந்தை சற்று முன் அவன் மனதிலே குவித்துவிட்டுச் சென்ற சீதனத்தால் மெல்லமெல்ல மாறிக்கொண்டிருந்தது.

அன்றொருநாள் கொள்ளுப்பிட்டி 'பல்மேரு அவின்யூ' உள்ள பங்களாவின் முன் அறையில் மனோகர் புதினப் பத்திரிகையும் கையுமாக அமர்ந்திருந்தான். வெளியே நல்ல மழை.

உள்ளே அவனது சின்னம்மா பின்னேர தேநீருக்குச் சிற்றுண்டி தயாரித்துக் கொண்டிருந்தாள். திடீரென்று வெளியில் இருந்து "சிறிது நேரம் உள்ளே வந்து நிற்கட்டுமா" என்றொலித்தது ஒரு தேன்குரல். அக்குரல் கேட்டு மனோகர் தலைநிமிர்ந்தான்.

அங்கே...?

அவன் கண்களையே அவனால் நம்பமுடியவில்லை.

கவிகள் பெண் அழகிற்கு காட்டும் உவமைகளை அச்சில் வார்த்தாற்போன்ற தங்கப்பதுமையொன்று தயங்கியபடி நின்றுகொண்டிருந்தது.

அடுத்தகணம் மனோகர் "ஈசிச்சேரில்" இருந்து துள்ளிக்குதித்து, "தாராளமாக உள்ளே வரலாம்" என்று சொன்னதைத் தொடர்ந்து அந்தப்பதுமை உள்ளே அடியெடுத்துவைத்தது.

நனைந்த சேலையுடன் வந்துகொண்டிருந்த அவள் இயற்கை அழகை ரசித்தபடி நின்றுகொண்டிருந்த மனோகர் திடீரென ஏதோ நினைவுக்கு வந்தவனாய் "ரவல்" தரட்டுமா என்றான்.

வேண்டாம் "தாங்ஸ்" என்று கூறியபடி அங்கே கிடந்த நாற்காலி ஒன்றில் உட்கார்ந்தாள் அந்த வனிதை.

"நீங்கள் யார்? என்ன செய்கிறீர்கள்?" என்று பேச்சை ஆரம்பித்தான்.

"பக்கத்து வீட்டு பிள்ளைகளுக்கு ரியூசன் சொல்லிக் கொடுக்கிறேன்."

"ஓ அப்படியா?"

இதற்கிடையில் வெளியே பெய்துகொண்டிருந்த மழை ஓய்ந்து விடவே வருகிறேன் என்று சொல்லி புறப்பட்டாள்.

மழைக்காக இல்லத்தில் இடம் கொடுத்த மனோகர் தன் இதயத்திலும் அவளுக்கு இடம் கொடுத்துவிட்டான்.

மழையுடன் ஆரம்பித்த மானோகர், லட்சுமி நட்பு, மலர்ந்தது அவர்கள் இதயங்கள் இணைந்தன.

ஒருநாள் கடற்கரையில் லட்சுமி எப்போ என்னைத் திருமணம் செய்வீர்கள்?" என்று கேட்டாள்.

"லட்சுமி இக்கவலையை விடு. வருகிற லீவிற்கு வீட்டிற்குப் போய் அம்மா அப்பா அனுமதியுடன் எங்கள் ஊர்ச் சிவன்கோவிலில் உன்னை ஊரறியக்கைப்பிடிப்பேன்" என்றான்.

ஏற்கனவே அவனிடம் தன் உள்ளத்தைப் பறிகொடுத்த அந்தப் பேதை அன்று அவனுடைய அந்த 'வாக்கை' நம்பி தன் உடலையும் பறிகொடுத்தாள்.

விடுதி திரும்பிய லட்சுமியை "ஏது இவ்வளவு நேரம். உன் மாமா வந்து தேடிவிட்டுப் போனாரே" என்று சொல்லி வரவேற்றாள் அவளுடைய தோழி.

சிறிது நேரத்தின் பின் மாமா வந்தார். வரும் போதே அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. அத்துடன் அவர் உதட்டிலிருந்து "சீ! மானம் கெட்டகழுதை. எங்கே இவ்வளவு நேரமும் சுற்றிவிட்டு வருகிறாய். உன்தாய் சாக உன் அப்பன் இருந்தபொருட்களை எடுத்துப்போய் மறுமணம் செய்ய என் தங்கை வயிற்றுப் பிள்ளைகள் என்று உன்னையும் உன் சகோதரங்களையும் வளர்த்து உன்னையும் படிப்பித்து நீ நாலு காசுசம்பாதித்து தம்பியைப் படிப்பிப்பாய் என்று நான் பார்க்க, நீ உன் பாட்டிற்கு உனக்குப் பிடித்தவனுடன் சுற்றுகிறியே உன் நிலை எங்கே, அவன் நிலைஎங்கே? சற்றும் யோசித்துப் பார்த்தாயா" என்ற வார்த்தைகளும் வெடித்தன.

"ஐயோ மாமா அவரை அப்படி சொல்லாதீர்கள். எதுவிதத்திலும் என்னை ஊரறிய திருமணம் செய்கிறேன் என்று வாக்குகொடுத்திருக்கிறார்" என்றாள் அழுகையூடே லட்சுமி.

"எக்கேடு கெட்டாலும் போய்த்தொலை" என்று ஏசிவிட்டுச் சென்ற லட்சுமியின் மாமனார் அதன் பிறகு அவள் விஷயத்தில் அக்கறை காட்டவேயில்லை.

தோழிகள்தேற்ற ஒருவாறு தேறி அன்றைய புதுஉணர்வில் சிக்கிய லட்சுமி படுக்கையை அடைந்தாள். இன்பக்கனவுகளுடன் நித்திரை கொண்டெழும்பியவள் விடிந்தும் விடியாததுமாக மனோகரைக்கண்டதும் திகைத்து விட்டாள். கையில் தந்தியுடன் நின்ற மனோகர் தான் அவசரம் ஊருக்குப் போகவேண்டிய நிலையைக்கூறினான்.

லட்சுமியின் விம்மல் வழியனுப்ப புகைவண்டியிலேறினான் மனோகரன். கையிலிருந்த தந்தியில் குறிப்பிட்டபடி 'அம்மாவுக்கு திடீரென என்ன வந்தது என்று எண்ணியவனாய் சுன்னாகம் புகைவண்டி நிலயத்திலிறங்கி வீட்டிற்குச் சென்றான்.

அவனை அங்கே நடைபெற்ற அமர்க்களம் திடுக்கிட வைத்தது. அவனைக் கண்டதும் தகப்பன் செல்லையா வாத்தியார் தன் மனைவியைப் பார்த்து 'உன் மகன் வந்திருக்கிறான். அவனைப் போய்க்கேள், கண்ட கழுதைகளுடன் சுற்றவா நான் கொழும்புக்கு இவனை அனுப்பினேன்' என்றுகூற தாய் ஒரு பாட்டம் அழுது வடித்தாள். என்ன செய்யும்? அவளது தம்பியும் தங்கையும் அவனையே எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்' என்ற முதல் மனம் போர்க்குரல் எழுப்பவே அதற்கு அடிபணிந்த மனோகர்' அம்மா பிறக்கிராசியார் வீட்டைபோய்ப் பொம்பிளையைப் பார்த்துவிட்டு வந்து முடிவு சொல்கிறேன்'என்று சொல்லிப் புறப்பட்டான்.

வது என்று தெரியாது திகைத்தான் மனோகர். இறுதியில் நடந்தவற்றை ஒரளவுஊகித்துக்கொண்டான்.

தாயிடம் லட்சுமியைப் பற்றிக் கூறினான். ஆனால் தகப்பன் 'நான் இங்கை எங்கள் அந்தஸ்துக்குத் தக்கமுறையில் இணுவில் நாவுக்கரசு பிறக்கிராசியின் மகளைப்பேசி வைச்சிருக்கிறேன். லட்சம் காசும்காரும் கல்வீடு வளவு எல்லாம் சீதனமாகத் தாறன் எண்டு பிறக்கிராசியார் சொல்லியிருக்கிறார் ஒண்டுக்கும் வழியில்லாததுகளையா கட்டப் போறனெண்டு நிக்கிறாய்?' தந்தையின் சொற்களைக் கேட்ட மனோகருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

அங்குபோய் அவர்கள் வீட்டையும் பெண்ணையும் பார்த்தவன் அதன் பிறகு லட்சுமியைத் திரும்பிப் பார்க்கவேயில்லை.

இதேவேளையில் கொழும்பு பிரதான வீதியில் ஓடிக்கொண்டிருந்த ஒரு பஸ்ஸில் மனோகரின் நினைவுடன் பிரயாணம் செய்துகொண்டிருந்த லட்சுமி பக்கத்திலிருந்த வயோதிபர் ஒருவர் வைத்திருந்த பத்திரிகையின் முதற் பக்கத்தைப் பார்த்தாள். அடுத்தகணம் அவள் உள்ளம் திடுக்கிட்டது. அங்கே... மனோகரன் மணக்கோலத்தோடு ஒரு மங்கைக்கருகில் புன்னகை தவழ உட்கார்ந்திருந்த

'லட்சுமியை மணப்பதா? லட்சுமியை மணந்தால் 1 லட்சம் கார், வீடு, வளவு என்னவாவது' என்றது ஒரு மனம். 'சீ' லட்சுமியை மறந்தால் அவளைப்போல் வேறு பெண்ணை எங்கு காண முடியும்? காசும் காரும் பின் சம்பாதிக்கலாம்' என்றது அடுத்தமனம். 'ஐயோ ஒரு லட்சம் தேட எவ்வளவு காலம் செல்லும். அத்துடன் வீடு. வளவு, கார் இந்நிலையில் லட்சுமியால் என்ன சீதனமாகத் தரமுடி நிலையில் பிரசுரமாகியிருந்த திருமணப்படம் அவளைப் பார்த்துச் சிரித்தது.

நினைக்க முடியாத மனக் கவலையுடன் அந்தப் பஸ்ஸிலிருந்து இறங்கிய லட்சுமி நேரடியாக விடுதிக்குச் சென்று படுக்கையில் குப்புற விழுந்து குமுறிக் குமுறி அழுதாள்.

இன்றுவரை சீதனக் கொடுமைக்குப் பலியான அந்தப் பேதையின் அழுகை ஓயவேயில்லை.

(பாவும் கற்பனை)


"லேடன்" LEYDEN

தயாரிப்புகள்

★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட
★ கால்மேஸ் (Nylon & Cotton)

லேடன் காமென்ஸ்

74 A, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

போன்: 330


## மாயப்பிரபஞ்சம் — 5

# உயிரினம் அனைத்துக்கும் உயிரூட்டும் ஆதவன்

## — சுநாதன் —

இந்தப் பூமியின்கண் வாழும் ஜீவகோடிகள் அனைத்தினிற்கும் வேறு கிரகங்களில் உயிருள்ள ஜந்துக்கள் இருந்தால் அவற்றிற்கும் ஜீவபலம் கொடுத்து வாழவைப்பவன் ஆதவனே. அவனில்லாவிட்டால் உலகத்தில் எதுவுமே நிகழாது என்று கூறலாம், மழையைத் தருபவன் அவனே, காற்றை உண்டாக்குபவன் அவனே, கோடை மாரி வசந்தம் முதலிய பருவங்களை உண்டாக்குபவன் அவனே. சூரியனிலிருந்து வரும் உஷ்ணமும் ஒளியும் பலவிதமான கதிர் சத்துக்களும் உயிரினங்களை வளர்க்க உதவுகின்றன. சூரியவெளிச்சம் இல்லாத இடத்தில் ஒரு செடியை வைத்து அதற்கு எவ்வளவு உரம் போட்டுத் தண்ணீர் பாய்ச்சினாலும் அது வளராது. கொஞ்ச நாளில் செத்துப்போகும்.

பூமி தன்னைத்தானே சுற்றுவதால் இரவு பகல் உண்டாகிறது. மேற்கிலிருந்து கிழக்குப் பக்கமாக பூமி சுழல்வதால் சூரியன் கிழக்கில் உதித்து மேற்கே படுவதுபோலத் தெரியும் பூமி சூரியனைச் சுற்றி வலம் வருவதால் பருவகாலங்கள் நிகழ்கின்றன. பூமி தானிருக்கும் இடத்திலிருந்து ஆதவனை சுற்றிவிட்டு மறுபடியும் அதே ஸ்தானத்திற்கு வந்துசேரும் காலத் தவணையையே ஒருவருடம் என்கிறோம்.

பூமி தன்னைத்தானே சுற்றுவதை மறந்துவிட்டதென்று வைப்போம். என்ன நடக்கும்? ஆதவனை நோக்கியுள்ள பூமியின் ஒரு பாதியில் ஒரே பகலாகவும் மற்றப் பாதியில் ஒரே இரவாகவும் இருக்கும். பகலாயுள்ள பகுதியில் உஷ்ணமானது 100, 110, 120, 130 என்று மணிக்கு மணி ஏறிக்கொண்டே போகும். கிணறுகள் குளங்கள் முதலிய நீர் நிலைகள் யாவும் வற்றி வரண்டு போகும், மரஞ்செடிகள் வாடி வதங்கி செத்துப் போய்விடும். கடல்நீர் கொதித்துக் கொப்புளிக்கும் உயிரினங்கள் பல நாட்களுக்கு உயிரோடிருக்க மாட்டா. இதற்கு நேர்மாறாக சூரியஒளி படாத ஒரே இரவாயிருக்கும். மற்றப் பகுதியில் மணிக்குமணி குளிர் அதிகரித்துக் கொண்டே போகும். நீர் நிலைகள் ஐஸ்கட்டியாய் இறுகிவிடும்: தாவர வளர்ச்சியிராது குளிர் தாங்காமல் இங்கேயும் உயிரினங்கள் நெடுநளைக்கு ஜீவித்திருக்க முடியாது,

இத்தகைய வல்லமை படைத்த சூரியனை "கண்கண்ட தெய்வம்" என்று கூறுவது சாலவும் பொருந்தும் ஆண்டுகள்தோறும் பல தேசத்தவரும் பல ஜாதியாரும் சூரிய வழிபாடு புரிந்து வந்திருக்கிறார்கள். தைப்பொங்கலன்று தமிழராகிய நாம் ஆதவனுக்கே பொங்கல் படைத்து வணக்கமும் நன்றியும் தெரிவிக்கி

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாமிர்தம்

## ஆத்ம விசாரணை

'நான்' என்பதே விருத்திகளின் சமஷ்டி; அதன் மூலத்தானத்தை தேடிக்கண்டால் அகங்காரம் அடங்கும். ஆத்மா போல பிரகாசிக்கும் அகந்தை எப்போது ஆத்மாவில் லயமாகுமோ அப்போது சத்ஸ்வரூபமான ஆத்மாவென்றே எங்கும் நிறைந்த விளங்கும், எவ்விதமான இலேசங்களும் தன்னை யொட்டாதிருப்பதே ஆத்ம விசாரத்தாலுண்டாகும் பலன். இந்த சிறந்த பயனே பலன்களின் எல்லை. ஆத்ம விசாரமே முக்தி வழிகளில் சிறந்தது.

— ரமண மகரிஷி.

## ஆத்திரம் தீர்க்கும் விளையாட்டு

மனைவிமீதுள்ள ஆத்திரத்தை சிலர் பானை சட்டி மீது தீர்ப்பதுண்டு குழந்தைமீதுள்ள ஆத்திரத்தை சிலர் நாய் மீது தீர்ப்பார்கள் உள்ளே கிடந்து பொங்கிக் குமுறும் ஆத்திரத்தையும் கோபத்தையும் ஏதாவது ஒன்றின் மீது கொட்டித் தீர்த்து விட்டால் மனம் பாரம் குறைந்து லேசாகிவிடும். டென்மார்க் தேசத்தின் தலை நகரமான கோப்பன்ஹேகனில் தினமும் ஒரு காணிவல் விழா நடந்துகொண்டிருக்கிறது. அந்நகரில் பல பீங்கான் மட்பாண்ட தொழிற்சாலைகளும் இருக்கின்றன. அவற்றில் உற்பத்தியாகும் ஏராளமான கோப்பைகள். தட்டுகள் கிண்ணங்கள், கேத்தல்கள் முதலியவற்றில் உருவம் கெட்டவற்றை புறம்பாகத் தள்ளி வைத்துவிடுவார்கள். காணிவல்காரர் இந்த தன்னுபடியானவற்றை மலிவான விலைக்கு வாங்கிக்கொண்டுபோய் காணிவல் விளையாட்டுப் பகுதியில் அழகாகத் தொங்கவைப்பார்கள் மனைவியுடன் கோபித்துக்கொண்டுவருகிறவர்கள் ஐம்பது சதம் கொடுத்து பத்து மரப்பந்துகளை வாங்கி ஆத்திரம் தீர சில பீங்கான்களையும் கோப்பைகளையும் எறிந்து உடைத்து நொக்கிவிட்டு.று மனைவியை ஜெயித்துவிட்டோம் என்ற வெற்றிப் புன்னகையுடன் வெளியே வருவார்கள்.

## வைசறேய்க்கு வந்த 'அல்வா'

வங்காளப்பிரிவினையைத் தொடர்ந்து அங்கே பெரிய கிளர்ச்சிகளும் குழப்பங்களும் ஏற்பட்டன. வங்காள வாலிபர்கள் எறிகுண்டுக்கு 'அல்வா' என்று ஓர் இரகசியப் பெயரை வைத்திருந்தார்கள். இது எப்படியோ வெள்ளைக்கார சி.ஐ.டிக்காரருக்கும் தெரிந்துபோய் விட்டது. ஒருநாள் சென்னைக்கு விஜயம் செய்த வைசறேய் ஹாஞ் பிரபுவுக்கு விருந்துபசாரம் வைக்க நினைத்த சேர் சங்கரன் நாயர் திறமான வங்காளத்து அல்வா வாங்கியனுப்பும்படி சேர் பூபேந்திரநாத் வாசுவைக் கேட்டிருந்தார். வாசு 'அல்வா பார்ஸல் நாளையிரவு வந்து சேரும்' என்று நாயருக்குத் தந்தி கொடுத்தார். இது சி. ஐ டியின் கையில் சிக்கிவிட்டது அவர்கள் தந்தியையும் பார்ஸலையும் இடையில் மறித்து பத்திரமாக வைத்துக்கொண்டு நாயர், வாசு இருவருடைய நடவடிக்கைகளையும் மிகத் தீவிரமாகக் கண்காணிப்புச் செய்தார்கள் விருந்துபசாரம் அல்வா இல்லாமலே நடந்து முடிந்தது.


## இங்கே குடும்பக்கட்டுப்பாடு இல்லை

ஈ, இலையான் என்ற வகுப்பில் இவ்வுலகில் 85 000 வெவ்வேறு இனங்கள் இருக்கின்றன, இவற்றுள் சாதாரண வீட்டு இலையான்தான் உலகம் முழுவதிலும் வியாபித்திருப்பது. அதை கொடிய சஹாரா பாலைவனத்திலும் காணலாம். பனிக்கட்டி மூடிய வடதுருவப் பிரதேசத்திலும் காணலாம். ஓர் இலையான் ஒரேமுறையில் சுமார் 120 முட்டைகளை இடும். கோடைகாலம்தான் இலையான்கள் பெருகும் காலம், ஏப்ரல் மாதம் 15ந் திகதிக்கும் செப்டம்பர் 15-ந்துக்குமிடையில் ஒரேயொரு இலையான் இட்ட முட்டைகளிலிருந்து 5,59 872 கோடி இலையான்கள் உற்பத்தியாகலாம் என்று ஓர் ஆராய்ச்சியாளர் கூறுகிறார். இவை எல்லாம் உயிரோடிருந்தால் மனிதர் நடமாட முடியாது. கார், பஸ் முதலிய போக்குவரத்துகளுக்கும் பெரும் இடையூறாய் இருக்கும் இயற்கை அதற்கும் ஒருவழி கண்டுபிடித்திருக்கிறது. தவளைகளும் பல்லிகளும பாம்புகளும் பறவைகளும் எறும்புகளும் குளவிகளும் பெரும்பாலான இலையான்களை முட்டைப்பருவத்திலும் புழுப்பருவத்திலும் வளர்ந்த பருவத்திலும் சாப்பிட்டு விடுகின்றன.

## 'இப்பொழுதுபோக விருப்பமில்லை'

மூன்று பையன்கள் பள்ளிக்கூடம் போகாமல் தெருவில் விளையாடிக்கொண்டிருப்பதை ஒரு சாமியார் கண்டுவிட்டார். 'அடா பசங்களா! உங்களுக்குப் பரலோகத்துக்கு போகவிருப்பமில்லையா?' என்று அதட்டினார். இரண்டு பையன்கள் 'ஆமாம் ஸ்வாமி விருப்பமதான்' என்றார்கள், மூன்றுமவன் 'இல்லை ஸ்வாமி என்றான். சாமியார் திகைத்து 'என்ன இறந்த பின்பு பரலோகத்திற்குப் போக நீ விரும்பவில்லையா' என்று மறுபடியும் கேட்டார். அதற்குப் பையன் 'ஆ இறந்தபின்பு போகவிருப்பம்தான் நீங்கள் இப்பொழுதே ஆள் சேர்க்கிறீர்கள் என்றல்லவா நினைத்தேன்' என்றான்.

தயாரிப்பு:—வழிபோக்கன்




(7)

கோவிந்தனின் வீடு. அது வீடா? சாட்டுமரங்கள் ஆறினைத் தூண்களாகக்கொண்டு எழுப்பப்பட்ட ஒரு குடிசை வெயிலையும், மழையையும் தாங்கக்கூடிய அளவிக் கூரை தென்னங்கீற்றினால் வேயப்பட்டு அதன்மேல் வைக்கோல்பரப்பியிருந்தது. குனிந்து உள்ளே போக விடப்பட்ட ஓர் இடைவெளியைத் தவிர, நான்குபுறமும் தென்னங்கீற்றினால் 'செத்தை'கள் கோவிந்தன் கலியாணஞ்செய்த பிறகு கட்டிய வீடு.

முற்றத்திலே அழுக்கோடு அழுக்காய். இரண்டு குழந்தைகள் பிறந்தமேனியோடு விளையாடிக் கொண்டிருந்தார்கள் வீட்டை நெருங்கியதும் கோவிந்தன் குரல் கொடுத்தான்.

'அம்மா-அம்மா, இங்கை யார் வந்திருக்கிறதெண்டு பாரன்.''

அவன் குரலின் எதிரொலி கூட அவர்களைப் பார்க்கவரவில்லை முற்றத்தில் இறங்கி நடந்தபடியே, ''அம்மா'' என்று மறுபடியும் கோவிந்தன் கூவினான்.

அம்மா வரவில்லை. அவன் மனைவி அன்னம், மார்பளவு கட்டிய உடுப்பாவாடையோடு, வாசலில் தலையை நீட்டி, 'உங்கதம்பி பெண்சாதிக்கு வயிறு நோகுதெண்டு மாமியை இப்பதான் வந்துகூட்டிப் போறாங்க'' என்றவள், கோவிந்தனோடு வந்திருந்த சோமுவைக்கண்டதும் உடம்பை உள்ளே இழுத்துக் கொண்டாள்.

''அப்படியா? பிள்ளைபிறக்கிற நாள்தானே. அது போகட்டும். சோமுவையல்லவா கூட்டிவந்திருக்கிறன்.''

'வாருங்கோ. உள்ளே வந்திருங்கோ இப்பவே சாப்பாடு தரட்டுமா அல்லது உங்க தம்பி வீட்டுக்கு ஒரு பயணம் போய்வந்த பிறகு சாப்பிடலாமா?''

கோவிந்தன் சோமுவைப் பார்த்தான். சோமு அவனைத் திரும்பிப் பார்க்க நிமிர்கையில், அன்னம் அரை நிமிடத்துள் தன்னை ஒரு சேலையுள் சுற்றிக்கொண்டு நிற்பது தெரிகிறது.

அவனுக்கு அவன் அம்மா நினைவுதான் வருகிறது அவளும் இப்படியே குடிசையுள் இருக்கும்போது ஒரு கந்தையைக் கட்டிக்கொண்டிருப்பாள். யாராவது வருகிறபோது அல்லது அவள் வெளியே போகிறபோது தான் அந்த ஒரேயொரு பச்சைச் சேலையைக் கட்டிக் கொள்வாள்.

அந்த அம்பலவாணர் வீட்டிலே (அவன் வயிற்றினுள் இறங்கிய தியெல்லாம் ஜீரணிக்காமல் வாந்தியாக வெளிவரும்போலிருக்கிறது) அந்தப் பெண்கள் கட்டிய சேலைகள்! வானவில்லின் நிறபேதங்களை யெல்லாங் குழைத்தெடுத்து. உடம்போடு உடம்பாய்ப் பூசிவிட்டது போன்றதுணிகள்! காலை ஒன்று, மாலை ஒன்று என அவர்கள் மாறி மாறித் துணிகளை அணிகிற தோரணை! அவர்களது மனங்களும் அப்படியே காலை ஒன்று மாலை வேறொன்றை எண்ணி மகிழும் பச்சோந்தித்தனம்!

'என்ன சோமு, நீ உன்னுள்ளேயே இறங்கிவிட்டாய் போலிருக்கே!'

கோவிந்தனின் கதையின் ஆழமும், சோமுவை அவன் மன ஆழத்திலிருந்து வெளியே இழுத்துவிட்டது.

'என்ன சாப்பாடா? ஓ! சாப்பாடு கொஞ்சம் பொறுக்கும் வயித்துநோவு, பொறுத்திருக்குமா? அன்னத்தை உன் தம்பி வீட்டுக்குப் போய் வரச்சொல்லு. வந்தபிறகு சாப்பிட்டுக் கொள்ளலாம்.

'பிள்ளையளைப் பார்த்துக் கொள்ளுங்கோ, சுறுக்காய் வந்திடறேன்.

அன்னம் போய்விட்டாள் வெயிலில் குளித்துக் கொண்டிருந்த குழந்தைகளை கோவிந்தன் உள்ளே அழைத்தான். பரணிலே கிடந்த பாய் ஒன்றையெடுத்து நிலத்திலே விரித்து 'சோமு பாயிலே இரு' என்றார்.

பாயிலே உட்கார்ந்த சோமு கையிலிருந்த புத்தகத்தைப்பக்கத்திலேவைத்து சட்டையைக் கழற்றி ஒரு பக்கத்திலே போட்டுவிட்டு பாயில் நீட்டி நிமிர்ந்து படுத்துக்கொண்டான்.

வெளியே எறிக்கிற வெயிலுக்கு உள்ளே நல்ல குளிர்ச்சியாயிருந்தது. அவைவிட இத்தனை காலமாய்க் கூனிக்குறுகி வெறும் பலகைக் கட்டிலிலே கிடந்து நித்திரை முழுவதையும் சிந்தனையாக்கி, அந்தச் சிந்தனையுள் சிக்கித் தவித்தவனுக்கு, இந்த விடுதலைக் காற்றும், மண் நிலத்திலே போட்ட ஓலைப்பாயும் இதமாக இருந்தன.

'இப்படி ஒரு பழம்பாயிலே, பசி குடையும் வயிற்றை இறுகப்பிடித்தபடி பக்கத்திலே கிடக்கிற அம்மாவையும் ஆனந்தனையும் இடைக்கிடை பார்த்துக்கொண்டு தூக்கத்தை வரவழைக்கமுயலுகிற அந்த சுகம் இப்பொழுது மறுபடியும் என்னை நோக்கி வருகிறது போலிருக்கிறது.

பானையை எடுத்துக் கொண்டு கோவிந்தன் தண்ணீர் கொண்டுவரப் போகிறான். இலைகளையும் கூழாங் கற்களையும் வைத்துக் கொண்டு குழந்தைகள் கடைவைத்து விளையாடுகின்றன.

பானையோடு போகும் போது 'நீங்க சாப்பிட்டாச்சா' என்று கோவிந்தன் கேட்கிறான் 'ஓ சாப்பிட்டாச்சே' என்கிறது மூத்த குழந்தை. பையன் நாலுவயதிருக்கும். அவன்தான் கடைக்காரன். மற்றக் குழந்தை பெண்-மூன்று வயதிருக்கும். கடைக்கு வந்து சாமான் வாங்குகிற பெண்.

'ஏய் கடைக்காரன். அஞ்சு சதம் தேயிலை தா'

'அஞ்சுசதந் தேயிலையா? காசு குடு காசு'

'காசு இப்ப இல்லை. நாளைக்குத் தாறன்; இப்ப தேயிலை தா'

'கடனில்லை. காசு நாளைக் கொண்டா, தேயிலையும் நாளைக்குத்தான், போ'

'அப்ப இண்டைக்கு நான் தேத்தண்ணி குடிக்க என்ன செய்யிறதாம்?'

'பச்சைத்தண்ணியைக் குடி'

'பச்சைத்தண்ணியுமில்லாட்டி?'

'வாய்க்கால் தண்ணியிலை போய் விழுந்து தொலை'

சாமான் வாங்கவந்த பெண்ணுக்கு அழுகை வந்துவிட்டது! 'வாய்க்கால் தண்ணீரில் விழுந்தால் அது அடித்துக்கொண்டு போய் உண்மையிலே தொலைந்து போனால்—'

அவள் 'ஓ' வென்று அழ ஆரம்பித்துவிட்டாள். 'கடைக்காரன்' இதை எதிர்பார்க்கவில்லை. அவன் அழுகை உரத்தது. 'ஐயோ நான் விளையாட்டுக்குச் சொல்ல நீ ஏன் அழுகிறாய்' என்று அவன் சமாதானத்துக்குப் போறான் இதற்கிடையில் தண்ணீர்ப்பானையோடு வந்த கோவிந்தன் நிலைமையைப் பார்த்துவிட்டுப் பையனின் முதுகிலே ஓர் அறை வைத்தான், 'ஏன்டா அவளை அழ வைத்தாய்?'

ஒரு குழந்தை அழுத இடத்தில் இப்பொழுது இரண்டு குழந்தைகள் அழையிட்டன

சோமுவை இது ஒன்றும் நேரடியாகத் தாக்கவில்லை. ஆனால் அவன் உள் மனத்துள் ஒரு பெரிய சமூகம், அதன் எதிர்காலத்திலும் விடிவுகாண முடியாத சூழ்நிலையில் ஒடுக்கப்பட்டு நசிந்து கொண்டிருப்பதை இந்தச் சிறுவிளையாட்டு நிகழ்ச்சி படம் பிடித்துக் காட்டியது. கடன். பட்டினி, பச்சைத்தண்ணி.

கொலனி மக்கள், அம்மா 'புது வாழ்வு' நிலையம், கொலனியில் கூலித்தொழில் அம்பலவாணர் வீட்டுச் சேவகம் சிறை வாழ்க்கை எல்லாம் அவனுள்ளே ஒரு கணம் புயலாய்த் தோன்றி மறைந்தன.

குருசாமி!

'குருவே, உங்களுக்கு வணக்கம்'

இந்த நினைவோடு அவன் உள்ளம் அமைதிக்கு மீள்கிறது. அந்த அமைதியின் அழைப்பில் அத்தனைநாளாய் அணுகாத தூக்கம் அவனை ஆட்கொள்கிறது.

பூதாகாரமாய் அவன் வளர்ந்துநிற்கிறான், உலகளந்தவன்போல அவன் பின்னால் அவனைக் கவசமாகக்கொண்டு நோஞ்சைகளாய் நூற்றுக்கணக்கானவர்கள் நிற்கிறார்கள். ஆண்கள் - பெண்கள் குஞ்சு குருமன்கள்-கொலனி மக்கள்

முன்னால் உண்டு-உடுத்து உப்பிப்போன பலர் படையெடுத்து வருகிறார்கள்' பணம் படைத்த உருவங்கள், அவர்கள் கைகளிலே யிருந்து கற்கள் பறந்து வருகின்றன. பின்னால் நிற்கிறவர்களின் 'ஐயோ'க்குரல் நரம்புகளில் முறுக்கேற்றி ஒய்கிறது அவன்ஒருகையை நீட்டுகிறான். கற்களெல்லாம் அவன் கைமுன் வந்து வணங்கி நிலத்தில் விழுகின்றன.

இருபது-முப்பது குண்டாந்தடிகள் 'விண்'ணென்று சுழன்று வருகின்றன. பின்னால் நிற்கும் மக்களின் அவலக் குரல் அடங்கு முன்னரே அத்தடிகள் அவன்முன் வந்து விசை ஒடுங்கி நிலத்தை அடைகின்றன.

தீயைக் கொட்டி வந்த பல துப்பாக்கிக் குண்டுகள் அவன்முன் வந்து பனிக்கட்டிகள்போல் உருகி ஒழிகின்றன.

மக்களின் ஆரவாரமும், அவன் மகிழ்ச்சியுள் பேரலைகளாய் அண்ட முகட்டை முட்டுகின்றன.

பலமிழந்த எதிரிகள், யுத்தகளமாகிய அந்த வயலை விட்டு ஓடுகிறார்கள் 'புறமுதுகிட்டு ஓடுகிறார்கள்' என்ற பூரிப்பில், அவன் பின்னால் நின்ற நோஞ்சைகள் எல்லாம் கூவிக்குதிக்கின்றனர்.

அது என்ன? எங்கிருந்தோ ஒரு தீப்பந்தம் எதிரி ஒருவனது கையில் வந்துவிழுகிறது. அவன் வெறிபிடித்தவனாய் ஓடுகிறான்.

இத்தனை கன வேகமாய் எங்கே ஓடுகிறான்? ஒடுகிறான்? ஓடி மறைந்தேவிட்டான். அவன் போன வழியில் மற்றைய எதிரிகள், கோழைகள் ஓடுகிறார்கள். 'ஓடட்டும்!'

அவர்கள் மறைந்த இடம் இவர்களது குடிசைகள் இருக்கும்பக்கமல்லவா?

மாலைப் பொழுதின் மங்கிய ஒளியை விழுங்கிக் கொண்டு குடிமனைப்பகுதியிலிருந்து தீப்பிழம்புகள் வானில் எழுகின்றன.

அவன், -சோமுவின் உடலெல்லாம் தீப்பிழம்பாய்க் கொதிக்கிறது. குடிசைகளுக்கெல்லாம் தீயிட்டுவிட்டார்களோ, கோழைகள்?

திரும்பி, பின்னால் நின்ற மக்களைக் கைச்சைகையால் பின் தொடரச்செய்து ஓடுகிறான் அவன்.

தூரத்தில் வரும்போதே எதிரிகளின் கைங்கரியம் நிறைவடையும் கட்டத்தை நெருங்கிவிடுவதைக் காணுகிறான். இன்னும் இரண்டு-மூன்று குடிசைகள் தாம் பாக்கி.

அவன் நரம்புகள் புடைத்து இரத்தம் கொதிக்கிறது. அவன் வாய் அவனையறியாமல வெடித்த ஒலி, அவனையே அதிரச்செய்கிறது

''துரோகிகள்! நிறுத்துங்கள்.''

உடலெல்லாம் வியர்த்துக் கொட்ட கனவேகமாய்த் துடிக்கிற இருதயத்தோடு அவன் கண்விழித்துப் பார்க்கிறான்.

முன்னால் நின்ற கோவிந்தன், 'நன்றாகத் தூங்குகிறாயா? பசியில்லையா?' என்கிறான்.

நாற்புறமும்பார்த்து, தன்னைத்தன்னிலைக்குக் கொண்டுவந்த சோமு, எழுந்து உட்காருகிறான். சிறைக்கூடத்திலே தூங்காமற் கண்ட கனவு, உலகம் என்றபெரிய சிறைச்சாலைக்குள் அவன் புகுந்த அன்றே பகல் தூக்கத்தில் தோன்றி அவனை ஆட்டிவைத்ததை எண்ணி, அவனுக்குச் சிரிப்பு வந்தது.

'தூக்கமா? இனி விழிப்பாகவே இருந்துகொள்வேன். பசி, பசிக்கென்ன, ஊர்முழுதுந்தானே பசித்துக்கொண்டிருக்கிறது! அந்தப் பசியைத் தீர்க்க முடியுமா?' என்று தன்னுள்ளே சொல்லிக்கொண்டவன், 'தூங்கினேன் பசியும் கொஞ்சம் தொடங்கியிருக்கு. நீ சாப்பிட்டாச்சா?' என்றுகோவிந்தனைப்பார்த்துக் கேட்டான்.

'உன் நித்திரையைப் பார்த்திட்டு, பிள்ளையளைத்தம்பி வீடுவரை கொண்டுபோறு. அங்கே தம்பி பெண்சாதிக்கு நல்லா வயித்து நோ எடுத்திருக்கு. மருத்துவிச்சியைக் கூட்டியரத் தம்பி போயிட்டான். அம்மாவும் அன்னமும் அவளை ஆத்திக்கொண்டிருக்கினம். பிள்ளையளை விட்டிட்டு உன்னைப் பாக்க வந்தேன். நீ நித்திரையிலை ஏதோ புலம்பிக்கொண்டு முளிக்கிறபோதுதான் நானும் வந்தேன்.

'எழும்பி முகத்தைக் கழுவு - சாப்பிடுவோம். நாலுமணிக்கு மேலாச்சு'.

யந்திரம்போல் எழுந்து கைகால் கழுவிவிட்டுச்சோமு வந்தமருகிறான். வீட்டின் பின்புறத்திலிருந்த ஒரு

# ஊரடங்கும் வேளையிலே!

## எந்த நிகழ்ச்சியையும் நகைச் சுவையுடன் நோக்குவதில் ஓர் இதம் இருக்கிறது என நம்புகிறவர் இக் கட்டுரையாளர் "ஊரடங்கு சட்டம்" பற்றிய இவருடைய நோக்கு இது.

இரண்டு பாதசாரிகள் 'விசுக்,விசுக்'கென்று நடந்தார்கள். ஒரு பையன் ஓடிக்கொண்டிருக்கும் சைக்கிளில் தொற்றினான். "ஐயோ, என்னையும் ஏற்றிக்கொண்டு போ அண்ணே, நேரம் பிந்திப்போய்விட்டது!" பிளாவினுள் வார்க்கப்பட்ட கள்ளில் மிதந்த எறும்பையும் ஒதுக்கிவிட நேரமின்றி 'சர்'ரென்று உறிஞ்சினார் ஒரு வாடிக்கைக் 'கற்பகதரு ஆதரவாளர்', "உடனே இன்னுமொரு 'அரை'வார், நேரம் போகுது!"

—என்னவென்று நினைக்கிறீர்கள் ஊரடங்குச் சட்டகாலக்கெடு- மாலை மூன்று மணி நெருங்கிவிட்டது என்பதைச் சுட்டிக்காட்டும் அறிகுறிகள்தான் இவை.

'எல்லாம் நன்மைக்கே' என்பது மிகப் பழமையான ஒரு பழமொழி நேற்றுச் சாப்பிட்டுவிட்டுக் கையில் ஒரு தமிழ்ப் பத்திரிகையுடன் அமர்ந்தபின் 'ஊரடங்குச் சட்டத்தாலென்ன நன்மை' என்று யோசித்தேன். எதையும் நகைச்சுவையுடன் நோக்குவதில் ஓர் இதம் இருக்கிறது அல்லவா!

மாலை மூன்று மணிமுதல் காலை ஆறுமணிவரை கைவிரல்களை மடக்கிக் கணக்கிட்டுப் பார்த்தேன், சரியாகப் பதினைந்து மணித்தியாலங்கள்! சந்திகளில் அமர்ந்து பாகிஸ்தான் கலவரம் தொடங்கிப் பக்கத்துவீட்டுப் பெண்ணின் காதல்விவகாரம் வரை வம்பளப்பவர்கள், நூல்நிலையங்களில் இருந்து தமிழ்ச்சினிமாத் துக்கடாச் செய்திகளை வாசித்துக்கொண்டோ அல்லது ஆங்கிலப்பத்திரிகைகளில் படங்களைப்பார்த்துக்கொண்டோ நேரத்தைக் கொல்பவர்கள் சினிமாவுக்குப் போய்த் தலையிடி சம்பாதிப்பவர்கள்- இவர்கள் என்ன செய்வார்கள்?

"தமிழ்ப் பத்திரிகைகள் எல்லாம் முடிந்துவிட்டது!" என்று காலை பத்துமணிக்கே பத்திரிகைக் கடைக்காரர் சொல்லிவிட்டார் எங்கள் வாசகர்களுக்கு - குறிப்பாகத் தமிழ் வாசகர்களுக்கு- ஒரு பிறப்பில் உண்டான பழக்கம் இருக்கிறது, அதுதான் 'ஓசிப்'பத்திரிகைபடிக்கும் பழக்கம் ரயிலிலும்சரி, பஸ்ஸிலும்சரி, சினிமாத் தியேட்டரிலும் சரி - ஓசிப் பத்திரிகை படிக்காதவர்களை நீங்கள் கண்டதுண்டா? கண்டால் அது ஒன்பதாவது அதிசயம் (தவிர "நம்ம" நூல்நிலையங்களும் ஓசிப்பத்திரிகைகள் வாசிக்கும் பழக்கத்தையே கற்றுக்கொடுக்கின்றன. பிறநாட்டு நூல்நிலையங்களில் தினசரிப்பத்திரிகைகள் போடப்படுவதில்லை.) ஆனால் ஊரடங்கிய நேரத்தில் ஓசிப்பத்திரிகை படித்து நேரம் போக்கமுடியுமா? இதனால் பல தமிழ் வாசகர்கள் சொந்தமாகப் பத்திரிகை வாங்கத்தலைப்பட்டிருக்கிறார்கள், போலும்! புதிதாகத்தமிழ்ப் பத்திரிகை-சஞ்சிகைகள் ஆரம்பித்தவர்கள்பாடு ஊரடங்குச் சட்டம் முடியும் வரை ஜாலிதான்- அதாவது போட்ட முதலையெடுத்துவிடலாம்!

சாதாரணமாகப் பலகுடும்பப் பெண்மணிகள், இரவிரவாக "மதுபானக் கடைகளில் பரிசோதனை" முடித்துக்கொண்டு வரும் கணவனுக்காக நெடுநேரம் காத்திருப்பார்கள். 'டபிள் மாறு'க வரும் கணவருக்கு 'உண்டி கொடுத்து உயிர்கொடுத்து' விட்டு அவர்கள் உறங்கப் போக நள்ளிரவாகிவிடும். ஊரடங்குச்சட்டம் வந்தாலும் வந்தது, எல்லோரும் 'கப்சிப்' என்று நேரத்துக்குப் பேசச் சேருகிறார்கள் வீட்டுக்கு

'அடி உதவுவதுபோல அண்ணன், தம்பி உதவுமா?' என்று சும்மாவா சொல்லி வைத்தார்கள்!

இன்னொருதினம் காலை பத்துமணியளவில் ஒரு 'சைவாள் கபே'க்கு வடை சாப்பிடப்போனேன். வடை வந்தது-சும்மா சொல்லக்கூடாது, நல்ல வாசம் 'கமகம'க்கும் தயிர்வடை! நன்றாகத் தயிரில்ஊறிப்பொருமியிருந்தது. ஒன்றையெடுத்துக் கடித்துக் கொண்டே பேச்சுவாக்கில், "எப்ப போட்டது வடை?" என்று கேட்டேன்.

"ஓ வடையா,சாப்பிடுங்க ஐயா ஒன்பது மணிக்குத்தான் போட்டது!' என்று உற்சாகமாகக் கூறிக்கொண்டே 'பசுப்பால்' 'கப் டீ'ஐ 'டங்'கென்று மேசையில் வைத்தார், சப்ளையர். நான் இரண்டாவது வடையையும் முடித்துவிட்டுத் திருப்திகரமாக ஓர் ஏப்பம் விட்டேன். வயிற்றில் மெல்லிய போராட்ட அறிகுறி (எங்கு பார்த்தாலும் [illegible] தான், போங்கள்!) மீண்டும் சந்தேகத்துடன், 'என்னப்பா வடை எப்போது போட்டதென்று சொன்னாய்?' என்று கேட்டேன்.

'அதுதான் சொன்னேனே, ராத்திரி ஒன்பது மணிக்குத்தான் போட்டதெண்டு! தயிர் நல்லாய் ஊறியிருந்ததா?' என்று கம்பீரமாகப் பதிலளித்தார் அவர்.

முதல் நாளிரவு போட்ட வடைதயிரில்ஊறியிருப்பதில் சந்தேகப்படத்தேவையில்லை. ஆனால் சாப்பிட்ட மகானுபாவரின் வயிறு தாக்குப் பிடிக்குமா என்பதுதான் சந்தேகத்துக்குரிய விஷயம்.

— த. இந்திரலிங்கம் —

வடைப்பிரச்னை ஒருபுறமிருக்க, பல சாப்பாட்டுக் கடைகளில் சாம்பார்க்'கிடாரம்' ஒருபொழுதும் அடுப்பைவிட்டு இறக்கப்படுவதே இல்லை என நம்பிக்கையற்ற வட்டாரங்களிலிருந்து கிடைத்த பல செய்திகள் வலியுறுத்திக் கூறுகின்றன. எந்த உணவுப் பதார்த்தத்தையும் இளகச்செய்யும் அற்புதசக்தி இந்தச் 'சாம்பார்' எனும் திரவத்துக்கு (அல்லது திராவகத்திற்கு!) உண்டு என்பது வாசகர்கள் அறிந்ததே. பொதுவாகச் சாப்பாட்டுக் கடைகள் இரவு பத்துப்பதினொரு மணிவரை திறந்திருக்கும் அதனால் நாள்முழுவதும் சாம்பாரின் தேவையும் இருக்கவே செய்யும். சாப்பாட்டுக் கடைகளில் மிகமலிவாகவும், மிகத் தாராளமாகவும் கிடைக்கும் இந்த 'வஸ்து'வை அடிக்கடி தயாரிக்கும் சிரமத்தைக் குறைப்பதற்காகக் கடைக்காரர்கள் நிரந்தரமாகவே ஒரு 'கிடாரத்தை' அடுப்பில் வைத்திருப்பார்கள். அடிக்கடி மிஞ்சும் காய்கறிகள், குழம்புகள் யாவும் சேரும் கங்கைதான் இந்தச் சாம்பார்க்'கிடாரம்' நாள் பூராவும் அள்ளினாலும் வற்றாத 'அமுத சுரபி' இரவு பதினொரு மணிக்கும் இதனை அடுப்பிலிருந்து இறக்கமாட்டார்கள், ஏனெனில் மீண்டும் அதிகாலை மூன்றுமணிக்குச் சாம்பாரின் தேவை உண்டல்லவா! (இப்பொழுதுதானே சாம்பாரின் அசாதாரண உருசியின் இரகசியம் விளங்குகிறது' என யாரோ ஓர் அப்பாவி வாசகர் முணுமுணுப்பது என் காதில் விழுகிறது!)

ஆனால் ஊரடங்குச் சட்டம் மூன்று மணியிலிருந்து அமுலாகிறதால் சாம்பார்க்'கிடாரத்தை' அடுப்பிலிருந்து இறக்கவேண்டிய 'கட்டாய நிர்ப்பந்தம்' பலருக்கு ஏற்பட்டிருக்கும் என ஊகிக்கப்படுகிறது. மாலை மூன்று மணிதொடக்கம் காலை ஆறு மணிவரை அடுப்பை எரியவிடுவது, அரசாங்கக் கரியில என்ஜினைப் பராமரிப்பது போலாகிவிடும்' என்ற அச்சமே இதற்குக் காரணம். ஆதலினால் ஊரடங்குச் சட்டத்தின் புண்ணியத்தால் ஹோட்டல் வாசிகள் புதியவடை, புதிய தோசைகளைப் புதிய சாம்பார் சகிதம் உண்டு புத்துணர்ச்சி அடையலாம் அல்லவா!

அரசஊழியர்கள் சம்பளத்துடன் வீட்டில் குழந்தைகளைக் கொஞ்சலாம். திரைப்படத்துக்கு அழைத்துச்செல்லச்சொல்லிச் சதா 'அரிக்கும்' மனைவியைச் சமாளிக்க அருமையான ஒரு 'சாட்டு'? அதேசமயம் வீட்டு உபத்திரவம் தாங்கமுடியாமல் 'வேலைக்குப்போக விரும்புபவர்கள், வேலை ஸ்தலத்தில் நிம்மதியாக உறங்குபவர்கள்பாடும் அவஸ்தைதான்.

சிலபிரகிருதிகள் இருக்கிறார்கள் - நாள் முழுவதும் நாயாக அலைபவர்கள்; ஆனால் ஒரு கருமமும் நடக்காது. அவர்களுக்கெல்லாம் இது ஓர் அதிருஷ்டவசமான ஓய்வு, யார் கண்டார்கள், இந்தப்பதினைந்துமணி நேரத்தில் எத்தனை எழுத்தாளர்கள் தோன்றக்கூடும். அல்லது ஊர்சுற்ற முடியாத 'சட்டாம்பகலி இளைஞர்கள்' கல்விமான்களாக மாறக்கூடும்!

அதனால் தான் சொன்னேன், எந்தக் காரியத்திலும் நல்லது - கெட்டது இரண்டும் இருக்கிறது என்று! ஊரடங்குச் சட்டம் மட்டும் அதற்கு விதிவிலக்கா என்ன?!

---

# உயிரினம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

றேம். இந்துக்கள் பலர் தினமும் காலையில் சூரிய நமஸ்காரம் செய்கிறார்கள்.

சூரியனுடைய குறுக்களவு சுமார் ஒன்பது லட்சம் மைல்களாகும். பூமியைப் போல13 லட்சம்உருண்டைகளை அதற்குள் போட்டு அடைக்கலாம். சூரியனுடைய நிறை 2 என்ற இலக்கத்திற்குப் பின்னால் 27 பூஜ்யங்களைப் போட்டுப் பார்த்தால் என்ன தொகை வருகிறதோ அத்தனை தொன்கள். எங்கே, போட்டுப் பாருங்கள்.

பூமியைவிடச் சூரியன் பலமடங்கு நிறைகூடினதாகையால் அதன் ஆகர்ஷண சக்தி (இழுக்கும் சக்தி) அதேயளவுக்கு கூடுதலானது எனவே பூமியில் நூறு றாத்தல் கனமான ஒருவர் சூரியனில் சுமார் 2750 றாத்தல் நிறையுள்ளவராவார்.

சூரியனுடைய மேற்பரப்பில் அதன் உஷ்ண நிலை சுமார் 6000 டிகிரி சென்டிகிரேட் ஆகும் உள்ளே போகப்போக உஷ்ணம் அதிகரித்துக்கொண்டே போய் நடுமத்தியில் சுமார் நாலு கோடி டிகிரி ஆகிறதாம், 2 1/2மைல் குறுக்களவுள்ள ஒரு பனிக்கட்டி பூமியிலிருந்து சூரியன்வரை நீண்டு வியாபித்திருக்கிறதென்று வைத்துக் கொள்வோம் சூரியன் பூமிக்கு 9 கோடியே 27 லட்சம் மைல்களுக்கப்பால் இருக்கிறது. இப்பொழுது சூரியனுடைய உஷ்ணம் முழுவதையும் ஒரு [illegible] பனிக்கட்டிமீது பதியவைத்தால் ஒரே ஒரு விநாடியில் அது இருந்த இடம் தெரியாமல் உருகிப்போய்விடும்; எட்டு விநாடிகளில் தண்ணீர் ஆவியாகிவிடும்.

சூரியனில் சில சமயங்களில கரும்புள்ளிகள் தோன்றுவதுண்டு. இவை பெரும்பாலும் வட்டவடிவமாயும் சுமார் 50,000 மைல் குறுக்களவுள்ளதாயும் அதைவிடப் பெரியதாயும் சிறியதாயும் இருக்கும். இவை தோன்றும் காலங்களில் பூமியிற் பல ஆச்சரியமான மாறுதல்கள் உண்டாகின்றன. சீதோஷ்ணநிலைமையில் மாற்றம் உண்டாகும். பருவந்தப்பி மழை அதிகம் பெய்யலாம். அன்றிக் கொடிய வரட்சி உண்டாகலாம். மக்களின் குணாதிசயங்களிலும் மாற்றம் உண்டாகிறது. கோபம் முதலிய உணர்ச்சிகள் அதிகரித்துச் சண்டை சச்சரவுகள் மலிகின்றன சூரியப் புள்ளிகள் அதிகமாகத் தோன்றிய காலத்திலேயே அமெரிக்காவிலும், பிரான்ஸிலும், ரஷ்யாவிலும் புரட்சிகள் நடந்திருக்கின்றன

முதலாவது இரண்டாவது உலகயுத்தங்கள் நடந்த போதும் சூரியப்புள்ளிகள் தோன்றின. பூமியின் காந்தத்தன்மையை இப்புள்ளிகள் பெரிதும் தாக்கி காந்தப் புயல்களை ஏற்படுத்துகின்றன. திசைகாட்டும் கருவியில் வடக்கு தெற்காய் நிற்கும் ஊசியானது நிலைதடுமாறி வேறு திசைகளைக் காட்டி நிற்கும். வானொலி ஒலிபரப்புகள் சில சமயம் முற்றாகவே ஸ்தம்பித்துவிடும்.

சூரியப் புள்ளிகள் என்றும் நிலைத்திருப்பதில்லை. தோன்றுவதும் அழிவதுமாயிருக்கும். சில வருடங்களில் இப்புள்ளிகள் மிகப் பெரியனவாயும் அதிகமாயும் தோன்றுவதுண்டு. பதினொரு வருடங்களுக்கொருமுறை இவ்விதம் சம்பவிக்கிறது முதலில் இரண்டொரு புள்ளிகள் தோன்றி, வருடம் வருடம் அதிகரித்து 5 1/2 வருடங்கள் ஆகும்போது ஏராளமான புள்ளிகள் தோன்றுவதும், பின் படிப்படியாகக் குறைந்துவந்து பதினோராவது வருடத்தில் மறுபடியும் இரண்டொரு சிறுபுள்ளிகள் மட்டும் இருக்கும் மறுபடியும் அந்த பதினொரு வருடச்சக்கரம் சுழல ஆரம்பிக்கும்

சூரியனிலுள்ள பெரிய புள்ளிகளை தூரதிருஷ்டி கண்ணாடியின் உதவி இல்லாமல் புகைபிடித்த ஒரு துண்டின் மூலம் நாங்களும் நேரடியாகப் பார்க்கலாம், 2500 வருடங்களுக்கு முன்பே சீனப் தமது வெறுங்கண்ணால் இப்புள்ளிகளைக் கண்டனர். ஆனால் இக்காலத்தில் 1610-ம் ஆண்டில்தான் கலிலியோ என்ற வானசாஸ்திரி தூரதிருஷ்டி கண்ணாடி மூலம் முதன்முதல் இவற்றை கண்டுபிடித்தார்.

---

வாழைக்குட்டியிலிருந்து இரண்டு இலைகளை வெட்டிக்கொண்டுவந்த கோவிந்தன் சோமுவுக்கும் தனக்கும் உணவு படைக்கிறான்,

ஒரே உலகத்தில், ஒரே பெயர்கொண்ட பொருள் ஓரிடத்தில் கசப்பாயும், வேறோரிடத்தில் உவப்பாயும் இருக்கிறது விந்தைதான். சோமுவுக்கு, காலையில் தான் சுவைத்துப் பார்த்த தோசையும், இப்பொழுது வாயிலும் மனத்திலும் உவப்பைச் சுரக்கிற சோறும் இரண்டு எதிர்த் துருவங்களில் நின்று உலகை அளந்து காட்டின.

ஒரு துருவத்தில் ஈரமற்ற வியாபார நோக்கு. மறுதுருவத்தில் மனிதாபிமானத்திலே தோய்ந்த உபசரிப்பு.

'நீ ஆறுதலாகச் சாப்பிடு சாப்பிட்டபிறகு பேசாமல் படுத்திரு. நான் தம்பி வீட்டுக்குப் போய் வர்றேன்',

விரைவாகச் சாப்பிட்ட கோவிந்தன் போய்விட்ட பின்னர் சோமு அமைதியாகச் சாப்பாட்டை முடித்துவிட்டு பாயில் வந்தமர்ந்தான்

உணவை அவன் வாய் மெல்ல மெல்ல, உலகை - அவன்வாழ்வை இதுவரை உருட்டிவிட்ட உலகை - மெல்லத்தொடங்கிய சோமுவின் உள்ளம், அவன்பாயில் வந்தமர்ந்தபிறகும் தொடர்ந்து சென்றுகொண்டேயிருந்தது.

(வளரும்)


Rose

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

(2ம் பக்கத் தொடர்ச்சி)

துறை வெல்லவும் அவர்களுடைய அவதாரமே காரணமாயது. சங்க காலத்திலே போரையும் கொடையையும், வீரத்தையும், காதலையும் பொருளாகக்கொண்டு தமிழ் பாடல்கள் எழுந்தன; சங்கம் மருவிய காலத்துப் பாடல்களும் நிலையாமை, அறம், ஒழுக்கம் என்பவற்றைப் பொருளாகக்கொண்டெழுந்தன. ஆனல் பல்லவர் காலத்தில்தான் பாடல்கள் ஞானத்தமிழாக வெளி வந்தன. இதனைச் சிறப்பாகத் தந்தவர் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளே. இதற்கு வழிகாட்டியவர் காரைக்காலம்மையாரெனினும் அதனைமுற்ருக வளர்த்த பெருமை ஞானசம்பந்தர்க்கேயுரியது இறைவனையே பாடி இம்மைமறுமை இன்பங்களைப்பெறலாமென்பதற்கு வழிகாட்டியது அவருடைய திருநெறிய தமிழ். சேக்கிழார் பெருமானருளிய பெரியபுராணத்தை அரங்கேற்றியபோது பாராட்டுரை வழங்கிய அறிஞர்கள் "தோடு செய்த திருநெறிய செந்தமிழோடொக்கும்" என்று போற்றினர் என்பது உணர்தற்குரியது.

## உணர்வரிய மெய்ஞானம்

தண்மையில் அமுத ஞானம் ஊட்டப்பட்டவர் சம்பந்தர்; அதன்பேருக உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞானம் ஆகிய இரண்டையும் பெற்ருர். சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் என்பது அபர ஞானம். அதுவே உவமையிலாக் கலைஞானம் என்பதுமாகும். மற்றும் பரஞானமாகிய பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானமே உணர்வரிய மெய்ஞானமாகும்.

# இன்னிசையாற் தமிழ் பரப்பும்

இவ்வகையுணர்வு பெற்றவரானபடியால் அவர் பாடல்களும் கற்போர்க்கும் அருள் ஞானமூட்டக்கூடியவை இதனை ஒதியுணர்ந்த பட்டினத்தார், சேக்கிழார், அருணகிரிநாதர், தாயுமானுர் இராமலிங்கசுவாமிகள் ஆகியோர் இவரையே குருவாகக் கொண்டு வழிபட்டனர். இவருடைய திருநெறிய தமிழில் திளைத்த இராமலிங்க அடிகள்,

"தேன் படிக்கும் அமுதாம்
உன் திருப்பாட்டைத்
தினந்தோறும்

நான் படிக்கும் போது
என்னை நானறியேன்
நவொன்ருே

ஊன் படிக்கும் உளம்
படிக்கும் உயிர்படிக்கும்
உயிர்க்குயிரும்

தான் படிக்கும்

அனுபவங்காண்
தனிக்கருணைப்
பெருந்தகையே"

என்று உருகிப் பாடுகிருர்.

தொல்காப்பியர், இளங்கோவடிகள், திருவள்ளுவர் போன்ருேர் பெருநூல்களை ஆக்கியபோதும் மக்களை இயக்கி அப்பணியில் ஈடுபட்டார்கள் என்று சொல்லிவிட முடியாது. ஆனல் ஞானசம்பந்தப்பெருமான் மக்களை இயக்கியே, அவர்களூடே வாழ்ந்தே, தமது அருட் பாடல்களை ஆக்கியுள்ளார். "நாளும் இன்னிசையாற் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தன்" எனப் போற்றினுர் சுந்தரர். ஊர்கள் தோறுஞ் சென்று, மூலைமுடுக்குகளெல்லாம் தெய்வீகமும் செந்தமிழும் கலந்தோட வழிகாட்டியவர் இவர். இயற்கை எழிலை இறையெழிலாகக் காட்டினுர்.

## இறை உணர்வை எழுப்பினுர்

இயற்கையை அழகுபடுத்தி அதன் உள்ளீடாக இறை உணர்வை எழுப்பிருர். மந்திகளின் அச்சம் நீங்குவது போல் ஆன்மாக்களின் அவலமும் திருவையாற்றுப் பெருமானைச் சரணடைந்த அளவில் நீங்குகிறது என்பதையும், அன்பர்களின் இருதய கமலங்கள் தேதாரத் தலத்தில் மலர்கின்றன என்பதையும் வண்டுகள் கருமை மாறிச் செம்மையுற்றது போல உயிர்கள் பாசங் கழன்று சிவத்துவம் பெற்றன என்பதையும் மிருகங்கள் தானும் சிவவணக்கம் செய்வதில் முன்னிற்கின்றன என்பதையும் அவர் பாடல்கள் விளக்குகின்றன.

## இலக்கியத்தில் மறுமலர்ச்சி

செய்யுள் இலக்கியப் போக்கிலும் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர்இவர் என்ருல் அதில் மிகையொன்றுமில்லை 'மூல இலக்கியம்" என்று சேக்கிழார் இதனைத் தொகுத்துக் கூறினுர்.

"செந்தமிழ் மாலை
விகற்பச் செய்யுட்களால்
மொழிமாற்றும்
வந்த சொற்சீர்
மாலைமாற்றும் வழிமொழி
எல்லா மடக்கும்
சந்த இயமகம் ஏகபாதம்
தமிழ் இருக்குக்
குறள் சாத்தி
எந்தைக்கு எழுகூற்றிருக்கை
ஈரடி ஈரடிவைப்பு".
"நாலடி மேல்வைப்பு
மேன்மை நடையின்
முடுகுமிராகம்
சால்பினில் சக்கரம்
ஆதி விகற்பங்கள்
சாற்றும் பதிக

மூல இலக்கியமாக எல்லாப்
பொருளுகளு முற்ற
ஞாலத் துயர்
காழியாரைப் பாடினுர்
ஞானசம்பந்தர்"

எனப் பெரிய புராணம் குறிப்பிடுகிறது.

## பெண்மைக்கு பெருமைகொடுத்தார்

பெண்களைப்போற்றுவதில் பெருமை கண்ட நாடு தமிழ் நாடு அது தமிழர்களுடைய சிறப்பான நாகரிகமுங்கூட. சமண பௌத்த நாகரிகம் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே சம்பந்தப் பெருமான் தமது பாடல்களில் அம்மையப்பனுக இறைவனைப் போற்றியும் மங்கையர்க்கரசியாரின் தொண்டினைப் பாராட்டியும் பாடியுள்ளார்.

"மங்கையர்க் கரசி
வளவர் கோன்பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி
பாண்டிமா தேவி
பணி செய்து
நாடொறும் பரவ"
என்பது பாடல்.

இன்னும் இவருடைய அருள் வீரஞ்செறிந்தபாடல்களையும் நாம் உணரவேண்டும்.

"ஈனர் கட்கெளியேனலேன்
திரு வால
வாயரனிற்கவே"
என்றும்

"ஞாயிறு திங்கள்செவ்வாய்
புதன்வியா ழம்வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
யாசறு நல்லநல்ல
வவைநல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே."
என்றும் பாடுகின்ற தன்மையை நோக்கினல் அவருடைய உள்ளத்தில் இறையருள் நிரம்பிவழிந்தமையை உணரமுடிகிறது.

## தன்னிகரில்லா தலைவர்

ஏழாவது நூற்ருண்டிலே ஒரு பொறுப்பு வாய்ந்த தலைவராகதிருஞானசம்பந்தமூர்த்திநாயனுர் விளங்கினுரென்பதற்கு அவருடைய பாடல்களே சான்றுகளாக விளங்குகின்றன. அவர் தங்கியிருந்தமடத்திற்குச்சமணர்கள் தீவைத்தபோது "பையவே சென்று பாண்டியற்காகவே" எனப்பாடியருளியதும் திருமண வைபவத்தை முன்னிட்டு "கல்லூர்ப் பெருமணம் வேண்டா" என்று பாடியதும் இவற்றுக்குப் போதிய சான்றுகளாம். எனவே காலத்தினுற் செய்த நன்றியை நோக்கின் திருஞானசம்பந்தருடைய பாடற்பணி ஞாலத்தின் மாணப்பெரியது.

"நந்தி நாமம்
நமசிவாய வெனும்
சந்தையாற் றமிழ்
ஞானச்சம்பந்தன் சொல்
சிந்தையாற் றொழு
தேத்த வல்லாரெலாம்
பந்தபாசம் அறுக்க
வல்லார்களே."


# ஈழம் செல்வம் செழிக்க
# லங்கெம் இரசாயனங்களைப் பாவியுங்கள்!

விவசாயிகளே! பொன்யுகத்தின் முன்னுடிகளாய், நம் நாட்டில் செல்வம் செழிக்க, வெங்காயமும், மிளகாயும் பயிரிடுக.
அறுவடை நன்கு பெற...அனைவரும் செல்வம் பெற...முதலடி இன்றே எடுங்கள்!

உங்கள் வெங்காய, மிளகாய்ச் செடிகளைத் தாக்கும் பூச்சி, புழுக்களையும், களையையும் அழிக்க, இலங்கையில் லங்கெம் ஸ்தாபனம் ஒன்று மட்டுமே களைக்கொல்லி, புழுப்பூச்சிக்கொல்லி ஆகியனவற்றையும்,செடிவளர குரோ-மோ உரத்தையும் முழுமையாக அளிக்கிருர்கள்.

அசொட்ரின் 60, சுமித்தியன், பிளனவின், மில்ட்ரெக்ஸ், குரோ-மோ உரம், டீ.டீ. நிலப் புகைப்படுத்தி ஆகியன லங்கெம் உற்பத்திகள். வெங்காயத்திற்கும், மிளகாய்க்கும் உகந்ததாக இவை தயாரிக்கப்படுகின்றன. ஈழம் செல்வம் செழிக்க, கூடிய வெங்காயமும், மிளகாயும் நாட்டுக!




குரோ-மோ உரம் | மில்ட்ரெக்ஸ் | அசொட்ரின் 60, | டீ.டீ. நிலப் புகைப்படுத்தி | சுமித்தியன் | பிளனவின் | குரோ-மோ உரம்

லங்கெம் இலங்கை லிமிடெட் ... எண் 919 கொழும்பு டெலி. 28333


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா (யாழ்ப்பாணம்)
காலை 10 30 பி ப 1-30
(இரு காட்சிகள்)
சிவாஜி - கே. ஆர் விஜயா
நடித்த
தங்கை

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30a.m
Spell Binding Suspence
Thriller
BANDITS in ROME

தினசரி பி ப. 1-30
சிவாஜி-சௌகார் ஜானகி
நடித்த
லக்ஷ்மி
கல்யாணம்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 9-30, மட்டும்
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
அன்பளிப்பு

வெல்லிசினிமா
மானிப்பாய்
தினசரி10 00, 1-30மட்டும்
ஜெய்சங்கர் -விஜயகுமாரி
நடித்த
குழந்தையும்
தெய்வமும்

# வலது குறைந்தவர்களுக்கும் வாழ்வு கொடுப்போம்!

வலது குறைந்தவர்களை நாம் எங்கும் காண்கின்றோம். வீதியோரங்களில் தங்கள் இன்னுயிரைக் காப்பாற்றுவதற்குப் பிச்சையெடுத்துக் கொண்டோ, அல்லது அனாதை இல்லங்களிலோ அல்லது (மிக அருமையாக) தயாளசிந்தையுடைய பெற்றோர், சொந்தக்காரர்களுடைய வீடுகளிலோ வசிக்கின்றார்கள். அவர்களுக்கு எவரும் வேலை கொடுப்பதில்லையாதலினால் அவர்கள் வேலைசெய்வதில்லை. வேலையிலிருக்கும்பொழுது சுகவீனமுற்றாலோ, அல்லது சுகவீனம் கூடினாலோ, சாதாரண திடகாத்திரமானவருக்கு வேண்டிய செலவிலும் பார்க்க கூடிய செலவு கொடுக்க வேண்டி வரும் என்ற பயத்தினால், யாரும் இவர்களுக்கு வேலைகொடுப்பதில்லை. அவர்களுக்கு வேலைகொடுப்பது 'பாவம்' என்னும் மூடநம்பிக்கையுமுண்டு ஒரு மனிதன் தன்னுடைய நன்மைக்காகவேலை செய்கின்றானென்றால் அது பாவமா? அர்த்தமற்ற வார்த்தை!

அங்கக் குறைவுடன் பிறந்த எத்தனையோ பலர் இன்று தம் வாழ்வுக்காக வாடி வதங்குகிறார்கள். அன்னார்களும் வாழவேண்டும்! எப்படி வாழ்வது? என்பதை இரத்தினச்சுருக்கமாகக் காட்டுகிறது இக்கட்டுரை.

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி 10-30 மட்டும்
ராஜ்கபூர் - நர்கிஸ்
நடித்த
அவன்

REGAL - Jaffna
Daily 9 30 a m 1 15P.M.
Audi Murphy
in
BULLET FOR A
BAD MAN

"ஏகன்"

### பிழையான எண்ணங்கள்

இப்படிப் பிழையான எண்ணங்கள் மூடநம்பிக்கைகளால், பெரும்பாலான வலது குறைந்தவர் தங்கள் பொன்னான நேரத்தையும் சக்தியையும் வீணேகழிக்கின்றார்கள் அவர்களுக்கு வேலையொன்றும் இல்லாமையினாலே அதிகம் மனத்தை அலைக்கழித்து, பலவிதமனோவியாதிகளுக்கு ஆளாகி, மேலும் மேலும் சுகவீனமுறுகின்றார்கள். "வேலையற்றவனின் மனம் சாத்தானின் வேலைஸ்தலம்". வேலையில்லாமல் பிறரை நம்பி வாழ்வதென்பது உண்மையாகவேவேதனைதான் அவர்கள் கடைசியாக எல்லோராலும் புறக்கணிக்கப்பட்டு மிகமனவருத்தத்துடன் இருக்கின்றார்கள். புதுமையென்னவென்றால், அங்கவீனர்கள் அனாதையில்லங்களில் இறந்தபின், முன் எப்பொழுதுமே பார்த்தேயிராத அனாதையில்லங்களைத்தேடி வந்து, சொந்தம் பாராட்டி, சடலங்களை எரிப்பதற்கோ தாழ்ப்பதற்கோ எடுத்துச்செல்கின்றார்கள்! ஏன்?

### பிறர் தருமத்தில் வாழுவதா?

வலதுகுறைந்தவர்கள் எந்த ஒரு வேலையையும் செய்ய முடியாமல் மிகவும் சுகவீனமாக இருந்தாலொழியப் பிறருடையதருமத்தில்தங்கியிருப்பது கூடாததும் முடியாததுமாகும். தருமத்தில் மாத்திரமே தங்கியிருப்பது சுயமரியாதையை இழப்பதாகும். சுயமரியாதையை இழந்தவுடன் சுலபமாகக் குற்றவாளிகளாக மாறுவார்கள்.

அங்கவீனர்கள் தங்களுக்குத் தாங்களே உதவமுடியுமா? நிச்சயமாக முடியும்! அவர்களுக்குச் சிறிதளவு கல்வி தேவை. பட்டங்கள் தேவையில்லை ஆனால் சில வேலைகளில் பயிற்சிதேவை தையல், தச்சுவேலை, தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும், கூடைபின்னல், மணிக்கூடுகள் திருத்தல் முதலிய எல்லாவேலைகளை யும் அவர்களின் ... அத்துடன் விருப்பத்துக்கும் ஏற்றவாறு செய்யலாம். அவர்கள் சிறு குழுக்களாகக் கூடி ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பாகவேலையைச் செய்தும், ஒரு வேலையை முடிக்கலாம் (Team Work) அவர்களுடைய பொருட்கள் சாதாரணமானவர்களால் செய்வனவிலும்பார்க்கக் குறைந்த தரமல்ல பொருட்களை விற்பதும் ஒரு பெரும் பிரச்சினையல்ல,

தொழிற் சிகிச்சை வல்லுனர் (Occupational therapists) ஒன்றிரண்டு தொழிலை, வலது குறைந்தவர்களுக்கு அவர்களின் விருப்பத்துக்கும் ஆற்றலுக்கும் ஏற்பப் பயிற்றலாம்.

### வேண்டப்படாதவர்கள்

யாரும் வலது குறைந்தவர்களைத் 'தேவை' என்று எண்ணுவதில்லை. ஏன், பெற்றோர்களும் சுற்றத்தாரும் கூட பல சமயங்களில் புறக்கணிக்கின்றார்கள் ஆகவே அவர்கள் குடியேறுவதற்கு இல்லங்கள் (Resettlement centres) தேவை. பயிற்சி முடிந்து வேலை தொடங்கிய பின் தங்கள் உழைப்பினாலேயேஇவ்வில்லங்களை நடத்தலாம் ஆனால் ஆரம்பிப்பதற்குரிய முதலை யாராவது ஏற்கவேண்டும் அம்முதலைத் தானும் அங்கவீனர்கள் திரும்பக்கொடுக்கக்கூடும்.

சில அங்கவீனர்களுக்கு டாக்டருடைய புத்திமதியும் (medical advice), தாதிமாருடைய சேவையும் (Nursing care), உடற்பயிற்சிமூலம் சிகிச்சையும் இடைக்கிடை தேவைப்படும். இவைகளுக்கு, அவர்களை அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பலாம் அல்லாவிடில் வைத்தியத்துறையினரிலிருந்து தொண்டர்களைக் கூப்பிடலாம்

### இலங்கையில் ஒரு ஒரு நிலையம்

இலங்கையில் அம்பிற்றியாவில் மாத்திரமே ஒரு புனருத்தாரண நிலையம் உண்டு. அதுகூட விடுதியில்லாமலிருக்கின்றது. தங்களைத் தாங்களே முற்றாகப் பார்த்துக்கொள்ளக் கூடியவர்கள்தான் அங்கு போய்ப் பயிற்சிபெறலாம். ஆகவே பெரும்பாலான அங்கவீனர்கள் பயிற்சிபெறமுடியாமல் வெளியே நிற்கின்றனர்.

### முதல் நிலையம்

புனருத்தாரண நிலையம் ஒன்று வேலூரில் உண்டு. அது கிறிஸ்தவ வைத்தியக் கல்லூரி ஆஸ்பத்திரி (Christian medical college hospital) யின் ஒரு பகுதியே. இந்த நிலையம் விடுதியுடன் அமைந்தது. இங்கு அங்கவீனர்களுக்குத் தொடர்ச்சியாகப் பயிற்சி (Course of training) அளித்தபின் அவர்களுடைய வீடுகளுக்கு அனுப்பிவிடுகிறார்கள். வீட்டுக்குப் போகமுடியாதவர்களுக்கு வேலைஸ்தலங்களையும் (Work-shops) விடுதிகளையும், அண்மையில் கட்டுவதற்குத்

(8-ம் பக்கம் பார்க்க)

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை10-00
சிவாஜி கணேஷன்
கே. ஆர். விஜயா
நடித்த
ராமன் எத்தனை ராமனடி

வின்ஸர்
(யாழ்ப்பாணம்
மறு அறிவித்தல் வரை தினசரி
காலை 9-30
பி. ப 1.15
மாஸ்ரர் பிரபாகர்
பேபி சுமதி - லெட்சுமி
நடித்த
வா ராஜா வா

3-வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 9-30
எம்.ஜி.ஆர். (இருவேடங்களில்)
சரோஜாதேவி
ரத்னா
நடித்த
எங்க
வீட்டுப்பிள்ளை

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்
கெப்பிட்டல் - பிளாஸா - மைலன் திரைகளில்
ரவிச்சந்திரன் ஜெயலலிதா
மனோகர், அசோகன், ஆனந்தன்
நாகேஷ், சுந்தரராஜன்
நடித்த
விஜயகா பிக்சர்ஸ்
மூன்றெழுத்து
(மர்மச்சித்திரம்)

வரி விளம்பரம்

தேவை
மின்விசையால் இயங்கும் லோன்றியில் றைகிளீனிங் வேலையில் அனுபவமுள்ள தொழிலாளர்கள் தேவை. மூஷின் இன்டஸ்றீஸ் லிமிட் இருபாலைவீதி, கோண்டாவில், 2473

விற்பனைக்கு
நல்லூர் வடக்கில் எட்டு அறைகளுள்ள புதிய வீடும் மூன்று பரப்பும் முப்பத்தையாயிரம். ஒன்பது பரப்பு இருபத்தேழாயிரம். விலை பேசலாம். விபரங்களுக்கு உரிமையாளர் (தரகரல்ல) 92, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. 2733

வியாபாரிகளே! பொதுமக்களே!
"ஓர் அரிய சந்தர்ப்பம்"
புதிய சந்தை
உங்களுக்குத் தேவையான காய்கறிகளை நேரடியாக உற்பத்தியாளரிடமிருந்து புத்தம் புதிதாகக் குறைந்த விலையில் வாங்க வேண்டுமா? விரைந்து வாருங்கள்
கோண்டாவில் கிழக்கில், பலாலி றோட்டுச் சந்தியில் (கொடித்தூக்கி ஆலடிச் சந்தி) புதுவருடத்தினத்தன்று புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட
★புதிய சந்தைக்கு★
தினமும் காலை 6-00 மணிக்கு ஆரம்பிக்கப்படும் இச்சந்தைக்கு மாவட்டத்தின் நாலாபக்கத்திலிருந்தும் விற்போரும் வாங்குவோரும் திரள் திரளாக வருகின்றனர். நீங்களும் உங்கள் தேவைகளுக்கு முந்திக்கொள்ளுங்கள். 3242

'சோவியத் நாடு'
★ சோவியத்-ஈழத்து மக்களின் நட்புறவின் குரல் "சோவியத் நாடு"
'சோவியத்நாடு' வாசியுங்கள்
★ சோவியத் மக்களின் சாதனைகளைப் பற்றியும், விசேஷமாக மத்திய ஆசிய மக்களின் புதிய வாழ்வைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம்.

'சோவியத்நாடு' வாசியுங்கள்
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்:-
தகவல் பகுதி, சோவியத் ஸ்தானிகராலயம்,
27, ஸர் எர்னஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிமொழிகள்



ஒருவன் தன்னுடைய தவறுகளை மிகைப்படுத்தியும் பிறருடைய தவறுகளைச் சிறிதாக்கியும் பார்க்கப் பயின்றால் மட்டுமே இரண்டையுமே நியாயமாக மதிப்பிட முடியும்.


0 0 0

சந்தேகம் என்பது, நம்பிக்கையின்மை, அல்லது நம்பிக்கைக் குறைவின் விளைவேயாகும்.

0 0 0

மரியாதை என்பது அந்தந்தச் சமயத்திற்குக் கைக்கொள்ளும் வெளிப்படையான பேச்சுநயம் மட்டுமன்று எதிரிக்கும் நன்மை செய்ய வேண்டுமென்னும் அந்தரங்க விருப்பமும் மனப்பூர்வமான பெருந்தன்மையுமே உண்மையான மரியாதையாகும்.

—மாாத்மாகாந்தி



# துல்கிரியா துணி ஆலை மூடப்பட்டது!

கோட்டை, வெள்ளி

நாட்டின் பல பகுதிகளில் ஆயுதப்படைகளையும்பொலிசாரையும் நேருக்கு நேர் நின்று தாக்கிய பயங்கரவாதிகள் இப்பொழுது அதை நிறுத்தியுள்ளனர் என்றும், அவர்கள் வெவ்வேறு சிறுசிறுகுழுக்களாகப்பிரிந்து செயல்படுவதாகஇராணுவச் செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதிகளின்கட்டுப்பாட்டில் இருந்த சில பகுதிகளை அரசாங்கப்படை இப்பொழுது கைப்பற்றி தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றது.

ராஜாங்கனைப் பகுதி இப்பொழுது பொலிசாரின் கையில் இருக்கின்றது. கடந்த 5-ந் திகதி துல்கிரிய ஜவுளி ஆலையைத் தாக்கியது சம்பந்தமாக, அப்பயங்கரக் கோஷ்டியில் இருந்ததாகக் கருதப்படும் சிலரைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர். அடுத்த அறிவித்தல் வரை துல்கிரியா துணிஆலை மூடப்பட்டிருக்கும்

துல்கிரியா துணி ஆலை ஆசியாவிலேயே மிகப் பெரிய ஆலைகளிலொன்றாகக் கருதப்படுவது. மறு அறிவித்தல் வரை மூடப்பட்டிருக்கும். அண்மையில் இவ்வாலைக் கட்டிடத்தினுள் பயங்கரவாதிகள் தஞ்சம் புகுந்துள்ளனர் என்ற தகவலின் பேரில் விமானப்படையினர்குண்டுகளைப்போட்டுத் தாக்கினர்.

மாகோவில் இயங்கும் பயங்கரஇயக்கத்தின் தலைவரெனக் கருதப்படும் ஒருவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர். இவர் நன்கறியப்பட்ட குற்றவாளி எனச் சொல்லப்படுகிறது.

தோட்டத் தொழில்கள் அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது 18-ந் திகதிவிற்பனவுக்குரியதாகக் குறிக்கப்பட்ட பொருட்களை கொழும்புக்கு அனுப்பிவைக்குமாறு சம்பந்தப்பட்ட பகுதியினரை அரசாங்கம் கேட்டுள்ளது.

போயா தினத்தன்று சந்தைப்படுத்தும்திணைக்களம், கூட்டுறவுப் பண்டகசாலை, மற்றும் தனியார்கடைகள் மூடப்பட்டிருக்குமென தொழில் அமைச்சு அறிவித்துள்ளது.

## கூட்டுறவுச் சங்கக் கடைகள் மூடியிருக்கும்

கோட்டை, சனி

கூட்டுறவு மொத்த விற்பனவு நிலயங்கள் இன்று நோன்மதி தினமான 17-ந் திகதி மூடப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. கூட்டுறவுச்சங்கங்கள், சமாசங்கள் அவற்றின் நிர்வாகக் குழுக்களின் விருப்பத்துக்கமைய இன்று நோன்மதி தினம் மூடலாம் என்றும், ஆயினும் 18-ந் திகதி முதல் தொடர்ச்சியாக திறந்திருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்றும் கூட்டுறவு ஆணையாளர் அறிவித்துள்ளார். தினமும் காலை 7 மணி முதல் 3 மணி வரை கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனவு நிலயங்கள் ஆகியன திறந்திருக்கவேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### வங்கிகள் நேரம்

நோன்மதிக்கு மறுநாள் தொடக்கம் சகலவங்கிகளும் காலை 10 மணிமுதல் 12மணி வரை திறந்திருக்கும் என்று நேற்று அரசாங்கம் அறிவித்தது

......

## விமானசேவை ஊழியர்கள் உதவி

யாழ்ப்பாணம், சனி

நாட்டில் இருக்கும் ஊரடங்குச்சட்டத்தின் காரணமாக, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் விமானமூலம் பிரயாணம்செய்யும் பிரயாணிகள், இரவில் விமானநிலயத்தில் தங்கியிருக்கவேண்டியுள்ளது. இவர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை நீக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை பலாலி விமானசேவை ஊழியர்கள் எடுத்துள்ளனர், இரவில் விமானநிலயத்தில் தங்கும் பிரயாணிகளுக்கு உணவு மற்றும் தேவையான வசதிகளை அவர்கள் செய்து கொடுகின்றனர்.

## ஊரடங்கு நேரம்

இன்று மாலை
6-00
மணி முதல்
நாளை காலை
6-00
மணி வரை

# வலது குறைந்தவர்களுக்கு

(7ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானித்திருக்கின்றார்கள். இந்தியாவில் முதல்முதலாக, இந்தவகையில், இந்த நிலையம்தான் தனியே டாக்டர் மேரி வேகீஸ் (Dr. Marry Verghese) இன் அயராத உவழைப்பினாலேயே ஆரம்பிக்கப்பட்டது. டாக்டரவர்களும்கால்களிரண்டும் வழங்க முடியாதவரே.

### ஒன்றுகூடிய ஆற்றல்கள்

நெடுந்தீவில் (அமெரிக்கா) (Long Island [U. S A]) ஹென்றி விஸ்காடி (Henry Viscadi) ஒரு 'ஒன்றுகூட்டிய ஆற்றல்கள்' (AbilitiesIncorpo-rated) என்ற வியாபாரச் சங்கத்தை உருவாக்கினர். தனிய வலது குறைந்தவர்களே நடத்துகின்றார்கள். ஹென்றி விஸ்காடி, அவருடைய புத்தகங்கள் ஒன்றில் அங்கு வேலைசெய்தவர்களைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். அவர்களுக்கு 'வாழ்க்கை'யைப் பற்றிய மனப்பாங்கே மாறுகின்றது. மேன்மேலும் சந்தோஷமாகவும் தேகசுகமாகவும் வருகிறார்கள். அவர்களுடைய நம்பிக்கையின்மை, தாழ்வு மனப்பான்மை, வெறுப்புயாவும் அற்றுப்போகின்றன. அவர்கள் ஒழுங்கான உபயோகமுள்ள பிரஜைகளாக மாறுகிறார்கள். அத்துடன் சிலர் திருமணம் செய்து சந்தோஷமாகவும் வாழ்கிறார்கள்,''

### உடனடித்தேவை

ஆகவே விடுதிவசதியுள்ள புனருத்தாரண நிலையமும்; வீட்டுக்குப்போக முடியாதவர்களுக்கு அவர்களாலேயே நடத்தக்கூடிய இல்லங்களும் அடைய முடியாதனவல்ல. இங்கு உடனடியாகத் தேவையும் ஆகும்.

புனருத்தாரண நிலையங்களையும் குடிவாழ் இல்லங்களையும் தொடங்குவதற்கு அரசாங்கத்தை எதிர்பார்த்தால் அது பகற்கனவாகவே முடியும். எங்கெங்கே புனருத்தாரண நிலையங்களையும் குடிவாழும் இல்லங்களையும் அமைக்க முடியுமோ அங்கங்கே நிலங்களையும் பணத்தையும் கொடுத்தால் நன்றாகவிருக்கும்.

தயாள சிந்தையுள்ள பெரியோர்கள், தொண்டர்கள் இராமகிருஷ்ணமிஷன் முதலிய மிஷனரிமார்கள், 'லயன்ஸ்', 'ரோட்டரி', 'ஏப்பெக்ஸ்', 'ஜெய்சி' முதலிய சங்கங்கள்தான் ஒருமித்தோ, தனித்தோ இந்நிலையங்களைத் தொடங்கித் திறமையாக நடத்தலாம்.

அங்கவீனர்களுக்கு இப்பொழுது என்ன தேவையென்றால் அனுதாபமும், ஆழ்ந்த அறிவும், அவர்களைப் புரிந்துகொள்ளுதலுமேயாம். ஒருவனுக்கு உணவளிப்பதிலும் பார்க்க, அவனுக்கு ஒரு வேலையில் பயிற்சியளிப்பது சிறந்தது. 'ஒரு ஏழைக்குத் தூண்டில் கொடுப்பது மீன் கொடுப்பதிலும் பார்க்க நன்று'' என்பது சீனப் பழமொழி.

தயாள சிந்தையுள்ள பெரியோர்கள், சங்கங்கள் தயைசெய்து கவனிப்பீர்களா?

# நிதி உதவிக்கு அமோக ஆதரவு

கோட்டை, வெள்ளி

பயங்கரவாதிகளின்தாக்குதல்களுக்குள்ளாகி பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நிதிஉதவி அளிப்பதற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கைக்கு பொதுமக்களிடமிருந்து ஆதரவு பெருகிவருகிறது. இதுவரை இந் நிதிக்கு 94 ஆயிரத்து நூறு ரூபா சேர்ந்துள்ளது.

ஒரு நாள் வேதனத்தை இந்தநிதிக்கு அளிக்குமாறு லங்கா தோட்டத்தொழிலாளர் சங்கம் தனது அங்கத்தவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளது இ. தொ. கா. வைச் சேர்ந்த நான்கு சங்கங்கள் ஒரு நாள் வேதனத்தை அல்லது அதற்குமேலானதை கொடுக்குமாறு தமது அங்கத்தவர்களைக் கேட்டுள்ளன.

இத்தநிதி உதவிக்கு உதவி செய்ய விரும்புபவர்களின் பெயர்ப்பட்டியலைத் தயாரிக்குமாறு அப்படித்தயாரித்தால் அவர்கள் அளிக்க விரும்பும் தொகையை அவர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கவசதியாக இருக்குமென இ. தோ. ச தலைவர் தொழிற்சங்கத் தலைவர்களைக் கேட்டுள்ளார்.

# 'அராஜகத்தையும் ஆபத்தையும் சில தினங்களில் மிஞ்சிவிடுவோம்'

## அமைச்சர் மைத்திரிபாலா உறுதி

கோட்டை, வெள்ளி

'பாசத்துக்கும் பக்திக்கும் அப்பாற்பட்ட அரசியல் தன்னியக்க இயந்திரமாக மாறி தீயசக்திகளினால் ஆளப்பட்டுள்ளார்கள் இளைஞர்கள். பெற்றோர்கள் பாரதூரமான செயல்களைச் செய்யாதிருக்க வேண்டிய போதிலும் தீய சக்திகளின் போதனைக்குட்பட்டு இளைஞர்கள் பலரும் யுவதிகளும் நாசகாரச் செயலில இறங்கியமையால் இன்றைய புத்தாண்டில் பாற் பொங்கலைப் புசிக்க முடியவில்லை இந்தத் துர்ப்பாக்கியநிலை இப்போது தான் முதன் முதலாக ஏற்பட்டிருக்கின்றது.'

இவ்வாறுமின்சக்தி நெடுஞ்சாலை அமைச்சர் திரு, மைத்திரிபால சேனநாயக்கா புத்தாண்டன்று நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விடுத்த புத்தாண்டுச் செய்தியில் தொடர்ந்து குறிப்பிட்டிருப்பவை வருமாறு:

2500 ஆண்டுகளாக யாம் கட்டிக்காத்துவந்துள்ள பண்பாடு அழிந்துவிடக்கூடாது.

சட்டம், ஜனநாயகம், வாழ்க்கை முறைக்கு எதிராகவே இன்று நாட்டில் பயங்கர சக்திகள் தலையெடுத்துள்ளன.

இந்த அடிப்படைப் பண்பாட்டை தகர்த்து விடும் நோக்கமாகவே தான் சிங்கள இந்து வருடப்பிறப்பும் ஈஸ்டர் பண்டிகையும் அமைந்த புனித நாட்களில் பயங்கர சக்திகள் தலையெடுத்து நமது நாட்டின் அமைதியைக் குலைத்துள்ளன.

நமது அரசு நேரான வழியில் ஸ்தாபிக்கப்பட்டது. நாட்டில் எந்தச் சக்திகளும் குறுக்கிடமுடியாத பலம் வாய்ந்த நிலையைப்பெற்றிருந்தது. நாட்டுமக்கள்தந்த பொறுப்பை சரியான வழியில் நிர்வகிக்கவே நமது அரசாங்கம் முயன்றுவந்தது.

இந்த நிலையை தொடரவிடாது அராஜக நிலையை உருவாக்கும் சக்திகள் இளைஞர்களின் உணர்ச்சியைத் தவறான பாதையில் சாதகமாக்க முயன்றுள்ளன

இப்படித் தீயசக்திகளினால் உதப்பட்டு வழிதவறிய இளைஞர்களை நல்ல ஆக்கபூர்வமானகாரியங்களைச் செய்ய பெற்றோர்கள் முன்வர வேண்டும். மனிதாபிமானமும் தேசப்பற்றும் தழைக்க வேண்டும்.

பௌத்தசங்கமும் ஏனைய மதத்தாபனங்களும் இந்தப் பணியினைச் செய்ய முன்வர வேண்டும். அரசாங்கத்தின் சார்பில் ஊழியர்கள் கடமையை உற்சாகத்துடன் புரிந்துவந்துள்ளனர். இன்னும் சில தினங்களுக்குப் பொறுத்துக்கொள்வோம். அராஜகத்தையும் ஆபத்தையும் யாம் மிஞ்சிவிடுவோம்.

## இரத்ததானம் வழங்க முன்வருக

கோட்டை, வெள்ளி

இலங்கை இரத்தவங்கிக்கு இரத்தம் வேண்டியிருப்பதால், இரத்தம்வழங்க விரும்புபவர்கள் அப்பகுதியிலுள்ள இரத்தவங்கிக்குச் சென்று இரத்தம் வழங்கலாம். இப்படிச்செய்வதுஒரு தேசிய சேவையாகக் கருதப்படும். இரத்தம் வழங்க விரும்புபவர்களிடமிருந்து இரத்தம்பெற வசதியாக கொழும்பிலுள்ள மத்திய இரத்த வங்கி நாள் முழுவதும் திறந்திருக்கும். கொழும்புப்பகுதியில் சிறுசிறு குழுவாகச் சென்று இரத்ததானம் வழங்க பொதுமக்கள் முன்வந்தால், அவர்களுக்குப் போக்குவரத்து வசதிகளைச் செஞ்சிலுவைச் சங்கம் செய்து கொடுக்க முன்வந்துள்ளது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org